# கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை

## கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள்

கொள்கை விளக்கக் குறிப்பு

**2016 – 2017**

மானியக் கோரிக்கை எண்.18

**க.பாஸ்கரன்**

கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத்துறை அமைச்சர்

தமிழ்நாடு அரசு

2016

# கொள்கை விளக்கக் குறிப்பு – 2016–2017

## பொருளடக்கம்


| வ.எண் | துறைகள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | பட்டுவளர்ச்சித் துறை | 1 – 66 |
| 2 | தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் "பூம்புகார்" | 67–92 |
| 3 | தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் | 93–132 |
| 4 | தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியம் | 133–142 |

# பட்டுவளர்ச்சித் துறை

## அட்டவணை


| வ.எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | பட்டுவளர்ச்சிக் குறிப்பு | 1 |
| 2 | பட்டுப்புழுவின் வாழ்க்கை சுழற்சி | 5 |
| 3 | இந்தியாவில் பட்டுத்தொழிலின் செயல்பாடுகள் | 6 |
| 4 | தமிழ்நாட்டில் பட்டுத்தொழில் | 7 |
| 5 | பட்டுவளர்ச்சித் துறை | 7 |
| 6 | பட்டுவளர்ச்சித் துறையின் பணியமைப்பு | 9 |
| 7 | பட்டுவளர்ச்சித் துறையின் செயல்பாடுகள் | 11 |
| 8 | பட்டுவளர்ச்சித் துறையின் உட்கட்டமைப்பு வசதிகள் | 12 |
| 9 | தமிழ்நாட்டில் மல்பரி சாகுபடி | 41 |
| 10 | வெண்பட்டு / கலப்பின பட்டு உற்பத்தி | 41 |
| 11 | பயிர்க் காப்பீடு | 42 |
| 12 | 2015–2016–ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் | 43 |
| 13 | புதுமைத் திட்டங்கள் | 53 |
| 14 | புதுமையான தொழில்நுட்பத்திற்கான விருது வழங்குதல் | 57 |
| 15 | 2016–2017–ஆம் ஆண்டிற்கான திட்டங்கள் | 58 |

| | | |
|---|---|---|
| 16 | பட்டுவளர்ச்சித் துறையின் சாதனைகள் | 60 |
| 17 | தமிழகத்தில் பட்டுத் தொழில் மேலும் விருத்தியடைய மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் | 63 |
| 18 | 2016–2017–ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு | 66 |

# தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் “பூம்புகார்”

அட்டவணை


| வ.எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 67 |
| 2 | தமிழ்நாட்டில்  பூம்புகாரின் கிளைகள் | 68 |
| 3 | விற்பனை நிலையங்கள் | 69 |
| 4 | கண்காட்சிகள் | 70 |
| 5 | உற்பத்தி நிலையங்கள் | 71 |
| 6 | விற்பனை அளவு | 73 |
| 7 | தொழில்நுட்ப அடிப்படையிலான முயற்சிகள் | 75 |
| 8 | நிதி நிலை செயல்பாடு | 76 |
| 9 | சிறப்பு  முயற்சிகள் | 77 |
| 10 | தொழில்நுட்பங்களை பயன்படுத்தி பூம்புகாரை மேம்படுத்துதல் | 81 |
| 11 | ஏற்றுமதி | 82 |
| 12 | சிறப்புத் திட்டங்கள் | 83 |
| 13 | மனித வள மேம்பாட்டினை வலுப்படுத்துதல் | 84 |
| 14 | கைவினைஞர்களுக்கான நலன் | 84 |
| 15 | புதுமைத் திட்டங்கள் | 87 |
| 16 | கன்னியாகுமரியில் நகர்புறக் கண்காட்சித் திடல் அமைத்தல் | 88 |

| | | |
|---|---|---|
| 17 | ஒருங்கிணைந்த கைவினைப்பொருட்கள் மேம்பாடு மற்றும்  வளர்ச்சி | 91 |
| 18 | தொலைநோக்குத்  திட்டங்கள் | 92 |

# தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

அட்டவணை



| வ.எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| | முன்னுரை | 93 |
| 1 | கதர் | 96 |
| 2 | வணிக அபிவிருத்தி நிதியுதவித் திட்டம் | 100 |
| 3 | கதர் நூற்போர் மற்றும் நெசவாளர்கள் | 101 |
| 4 | கிராமத் தொழில்கள் | 106 |
| 5 | கதர் மற்றும் கிராமத் தொழில் உற்பத்தி அலகுகளை நவீனப்படுத்துதல் | 115 |
| 6 | மண்பாண்டத் தொழிலாளர் குடும்பங்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை | 124 |
| 7 | ‘காதி கிராப்ட்’ விற்பனை நிலையங்கள் | 125 |
| 8 | பிரதம மந்திரியின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் | 127 |
| 9 | அரசின் நிதியுதவி | 128 |
| 10 | உற்பத்தி மற்றும் விற்பனை | 130 |
| | தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியம் | 133 |

# பட்டுவளர்ச்சித் துறை

பட்டு ஒரு இயற்கை புரதத்தினால் ஆன நெசவிற்கு பயன்படும் நூல் ஆகும். ஈடு இணையற்ற மேன்மையான தோற்றம், இயற்கையான பளபளப்பு, சாயங்களை ஈர்க்கும் பண்பு, அதிக உறிஞ்சும் தன்மை, குறைந்த எடை, மிருது தன்மை, நீண்ட நாள் உழைக்கும் திறன் ஆகிய பண்புகளால் பட்டுநூல் உலகளவில் மிகவும் நேர்த்தியான நூலாக விளங்குகிறது. தனித்துவம் வாய்ந்த இப்பண்புகளைக் கொண்டிருப்பதால் உலகம் முழுவதும் பட்டு "**நூலிழைகளின் ராணி**" என்று அழைக்கப்படுகிறது. பட்டுப்புழுக்களின் கூடுகளிலிருந்து பட்டுநூல் பெறப்படுகிறது. பட்டு நூலினை நூற்பதற்காக பட்டுப்புழுக்களை வளர்ப்பது பட்டுவளர்ச்சி எனப்படுகிறது.

பட்டு முதலில் சீனாவில் கண்டறியப்பட்டு பின்னர் உலகின் பிற பகுதிகளுக்கு பரவியது என வரலாற்று ஆதாரங்கள் தெரிவிக்கின்றன. சீனாவின் ஆவணங்களின் அடிப்படையில் ஏறத்தாழ கி.மு.2640–ஆம் ஆண்டில் பட்டு உற்பத்தி கண்டறியப்பட்டது என்றும், சீனாவில் பட்டுத் தொழில் நெடுங்காலமாக மேற்கொள்ளப்பட்டு வந்தது என்றும், சீன நாட்டினர் பட்டுத்தொழிலின் இரகசியத்தை 2500 ஆண்டுகளுக்கு மேல் பாதுகாத்து ஏகபோகத் தனியுரிமையுடன்

உலகின் மற்ற பகுதிகளுடன் பட்டு வணிகம் செய்து வந்தனர் என்றும் வரலாற்று ஆதாரங்கள் தெரிவிக்கின்றன. பட்டுத் தொழில் ஏறத்தாழ கி.மு.140–ஆம் ஆண்டில் சீனாவிலிருந்து திபெத் வழியாக இந்தியாவிற்கு பரவியதாக வரலாற்று ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

பட்டுத் தொழில் அதிக அளவில் தொழிலாளர்களை ஈடுபடுத்தக்கூடிய வேளாண்மை சார்ந்த தொழிலாகும். கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அதிக வேலைவாய்ப்பினை உருவாக்கக் கூடியதாகவும், குறைந்த மூலதனத்தில் அதிக வருவாயினை பெற்றுத் தரவல்லதாகவும் இத்தொழில் விளங்குகிறது. கிராமம் மற்றும் நகரமயமாக மாறிவரும் புறநகர் பகுதிகளில் வசிக்கும், பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர், குறிப்பாக மகளிருக்கு வேலைவாய்ப்பினை இத்தொழில் ஏற்படுத்தித் தருகிறது. இந்தியா போன்ற வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட நாடுகளில் சமூக, பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு பொருத்தமான தொழிலாக பட்டுத்தொழில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எனவே, கிராமப்புற மறுசீரமைப்பிற்கு ஒரு சிறந்த கருவியாக பட்டுத் தொழில் விளங்குகிறது. பட்டுத்தொழில், பட்டுப்புழுக்களுக்கு உணவு அளிக்கும் தாவரங்களை சாகுபடி செய்தல், நெசவிற்கு பயன்படக்கூடிய

மதிப்பு கூட்டப்பட்ட பட்டுநூல் உற்பத்திக்குரிய பட்டுப்புழுக்களை வளர்த்தல் போன்றவற்றை உள்ளடக்கியதாகும்.

பட்டுத்தொழில் குறைந்த காலத்தில், குறைந்த மூலதனத்தில், அதிக வருவாய் ஈட்டித் தரக்கூடிய, ஆண்டு முழுவதும் மேற்கொள்ளக்கூடிய மிகச்சிறந்த வாழ்வாதாரம் அளிக்கவல்ல தொழில்களுள் ஒன்றாகும். மேலும் பெண்களுக்கு மிகவும் ஏற்ற தொழிலாகும். 25 முதல் 27 நாட்களுக்குள் ஒரு பட்டுப்புழுவளர்ப்பு முடித்து அதன் மூலம் பெறப்படும் பட்டுக்கூடுகளை அரசு பட்டுக்கூடு அங்காடிகளில் நேரடியாக விற்பனை செய்து எவ்வித காலதாமதமுமின்றி அதே நாளில், அதற்குரிய தொகை பெறப்படுவதால், இத்தொழில், விவசாயிகள் மாதந்தோறும் வருவாய் பெறுவதை உறுதி செய்கிறது. பட்டு ஜவுளிகளின் மொத்த மதிப்பில் 57 சதவீதம், பட்டு விவசாயிகளுக்கு திரும்ப கிடைக்கிறது. அதாவது பணம் அதிக வருவாய் ஈட்டும் பிரிவினரிடமிருந்து குறைந்த வருவாய் பெறும் பிரிவினருக்கு சென்றடைய வழிவகை செய்வதால் பட்டுத்தொழில் கிராமப்புற மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்கு உறுதியான வழி வகுக்கின்றது.



பட்டுப்புழு மற்றும் பட்டுக்கூடு

## 2. பட்டுப்புழுவின் வாழ்க்கை சுழற்சி



## 3. இந்தியாவில் பட்டுத்தொழிலின் செயல்பாடுகள்

இந்தியா, உலக அளவில் மல்பரி கச்சாப்பட்டு உற்பத்தியில் சீனாவுக்கு அடுத்த இரண்டாவது நிலையிலும், பட்டுத் துணிகளை அதிக அளவு பயன்படுத்தும் நாடு எனும் சிறப்பையும் பெற்றுள்ளது. எனினும், தேவை மற்றும் உற்பத்திக்கிடையே இடைவெளி உள்ளது. எனவே தேவைக்கேற்ப பட்டுநூல் இறக்குமதி செய்வதனால், அந்நியச் செலாவணி வெளிநாடுகளுக்கு செல்கிறது. தற்போதைய நிலையில் ஆண்டு ஒன்றுக்கு இந்தியாவின் கச்சாப்பட்டு தேவை சுமார் 32000 மெட்ரிக் டன். இதில் 28500 மெட்ரிக் டன் மட்டுமே நம் நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது. எஞ்சிய கச்சாப்பட்டு தேவையினைப் பூர்த்தி செய்ய சீனாவிலிருந்து பட்டுநூல் இறக்குமதி செய்யப்படுகிறது. உலகளவில் மல்பரி, ஈரி, டசார் மற்றும் மூகா எனப்படும் 4 வகையான பட்டு வகைகளையும் உற்பத்தி செய்யும் ஒரே நாடாக இந்தியா திகழ்கிறது. தமிழ்நாட்டின் குறிப்பிடத்தக்கப் பங்களிப்புடன், தரமான பட்டு மற்றும் பட்டுத் துணிகளை இந்தியா உற்பத்தி செய்து, ஏற்றுமதி செய்வதால் ஆண்டிற்கு ரூ.2500 கோடி அந்நியச் செலாவணி ஈட்டப்படுகிறது.

## 4. தமிழ்நாட்டில் பட்டுத்தொழில்

தமிழ்நாட்டில் கைத்தறியில் உற்பத்தி செய்யப்படும் கைத்திறன் மிக்க கண்கவர் பட்டுப்புடவைகள் உலக அளவில் பிரசித்தி பெற்றவையாகும். சேலத்தில் உற்பத்தி செய்யப்படும் தனித்துவம் வாய்ந்த வெண்பட்டு வேட்டிகளுக்கு புவிசார் குறியீடு சட்டம் 1999 மற்றும் விதிகள் 2003–இன் கீழ் புவிசார் குறியீட்டு எண்ணைப் பயன்படுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் தற்போதைய பட்டுநூல் தேவையான 3000 மெட்ரிக் டன்னில் சுமார் 1900 மெட்ரிக் டன் மட்டுமே மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படுகிறது. மீதம் தேவைப்படும் பட்டுநூல் பெரும்பாலும் சீன நாட்டிலிருந்தும் கர்நாடக மாநிலத்திலிருந்தும் பெறப்படுகிறது.

## 5. பட்டுவளர்ச்சித் துறை

பட்டுவளர்ச்சித் துறையின் முக்கிய நோக்கமானது, நவீன பட்டுவளர்ப்புத் தொழில்நுட்பங்களை பயன்படுத்தி ஊரகப்பகுதி மக்களின் பொருளாதாரத்தினை மேம்படுத்திடும் வகையில், அவர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கித் தருவதாகும். பட்டுவளர்ச்சித் துறை, தனித்துறையாக சேலத்தை தலைமையிடமாகக் கொண்டு 1979–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தமிழ்நாடு அரசால் தோற்றுவிக்கப்பட்டது.

பட்டுவளர்ச்சித் துறையானது, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி சென்னை கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது.



**சேலம் பட்டுவளர்ச்சித் துறை இயக்குநரக புதிய கட்டடம்**


மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **2013–2014–**ஆம் ஆண்டில் அறிவித்ததற்கிணங்க, ரூ.**1.65** கோடி மதிப்பில் பட்டுவளர்ச்சித் துறை இயக்குநர் அலுவலக புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டது. மாநிலத்தில் பட்டுவளர்ச்சியினை மேம்படுத்த இயக்குநரகம் பல்வேறு திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறது.

## 6. பட்டுவளர்ச்சித் துறையின் பணியமைப்பு

தமிழகத்தில் பட்டுவளர்ச்சித் துறையின் மூலம் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்திட தமிழக அரசு கீழ்க்காணும் பணியிடங்களை ஒப்பளித்துள்ளது.

| வ.எண் | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் |
|---|---|---|
| 1 | இயக்குநர் | 1 |
| 2 | இணை இயக்குநர் | 4 |
| 3 | துணை இயக்குநர் | 10 |
| 4 | உதவி இயக்குநர் | 27 |
| 5 | பட்டு ஆய்வாளர் | 67 |
| 6 | உதவி பட்டு ஆய்வாளர் | 179 |
| 7 | இளநிலை பட்டு ஆய்வாளர் | 856 |
| 8 | இதர பணியிடங்கள் | 331 |
| | மொத்தம் | 1,475 |

பட்டுவளர்ச்சித் துறையானது, பட்டுக்கூட்டிற்கு முந்தைய நிலை, பட்டுக்கூடு நிலை மற்றும் பட்டுக்கூட்டிற்கு பிந்தைய நிலை ஆகிய பிரிவுகளுக்கு உதவும் வகையில் முன்னிணைப்பு மற்றும் பின்னிணைப்பு வசதிகளோடு அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் பின்வருமாறு ஒருங்கே அமையப் பெற்றுள்ளது.




**பட்டுவளர்ச்சி செயல்பாட்டிற்கான வழிமுறைகள்**

## 7. பட்டுவளர்ச்சித் துறையின் செயல்பாடுகள்

பட்டுவளர்ச்சித் துறையானது, தமிழ்நாட்டில் பட்டுவளர்ப்புத் தொழிலை மேம்படுத்த கீழ்க்காணும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.


- அதிக மகசூல் தரும் மல்பரி இரகங்களை சாகுபடி செய்ய விவசாயிகளை ஊக்குவித்தல்.
- மல்பரி சாகுபடி, முட்டை உற்பத்தி, புழு வளர்ப்பு, பட்டுநூற்பு மற்றும் பட்டு முறுக்கேற்றுதல் குறித்து பயிற்றுவித்தல்.
- வீரிய இரக மல்பரி சாகுபடி, சொட்டு நீர்ப்பாசனம் அமைத்தல், புழுவளர்ப்புத் தளவாடங்கள் கொள்முதல் செய்தல், இளம்புழுவளர்ப்பு மையம் அமைத்தல் மற்றும் தனியாக புழுவளர்ப்பு மனைகள் கட்டுதல் போன்றவைகளுக்கு நிதி உதவியளித்தல்.
- தரமான நோயற்ற பட்டுமுட்டைகளை விநியோகம் செய்தல்.
- தொழில்நுட்ப பரிமாற்றத்தின் மூலம் பட்டுக்கூடு உற்பத்தித் திறனை அதிகரித்தல்.
- பட்டு விவசாயிகளுக்கு பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்துதல்.

- பட்டுக்கூடு மற்றும் பட்டுநூல் ஆகியவற்றிற்கு சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்துதல்.
- தனியார் மற்றும் கூட்டுறவு அமைப்புகளுக்கு பட்டுநூற்பு மற்றும் பட்டு முறுக்கேற்றும் அலகு அமைக்க உதவியளித்தல்.

## 8. பட்டுவளர்ச்சித் துறையின் உட்கட்டமைப்பு வசதிகள்

ஈரோடு, தருமபுரி, வேலூர், திருச்சி மற்றும் மதுரை ஆகிய ஐந்து மண்டல அலுவலகங்கள் மூலமாக மல்பரி விரிவாக்கம் மற்றும் அதனைச் சார்ந்த பணிகள் மாநிலத்தில் உள்ள 19 உதவி இயக்குநர்களால் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. பட்டுவிதை ஒருங்கிணைப்புப் பணியினை, ஓசூரிலுள்ள துணை இயக்குநர் அலுவலகம், 5 உதவி இயக்குநர்களின் ஒத்துழைப்புடன் மேற்கொள்கிறது. மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் கச்சாப்பட்டினை வர்த்தகம் செய்யும் பணியை, காஞ்சிபுரத்தில் உள்ள அண்ணா பட்டு பரிமாற்றக அலுவலகம் மேற்கொள்கிறது. மாநில அளவிலான பயிற்சி நிலையம் ஒன்று, துணை இயக்குநர் தலைமையில் ஓசூரில் இயங்கி வருகிறது. இப்பயிற்சி நிலையம், பட்டு உற்பத்தியாளர்கள் மற்றும் துறை அலுவலர்களுக்கு பல்வேறு திட்டங்களின் கீழ் பயிற்சியினை வழங்கி வருகிறது.

கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், ஈரோடு, திருப்பூர், வேலூர், நாமக்கல், திண்டுக்கல், திருநெல்வேலி மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் பட்டுவளர்ப்பு தீவிரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. சென்னை நீங்கலாக பிற மாவட்டங்களில் மிதமான அளவில் பட்டுவளர்ப்பு செயல்படுத்தப்பட்டு வருகிறது.




**பல்வேறு மாவட்டங்களில் பட்டுவளர்ச்சியின் செயல்பாடுகளைக் குறிக்கும் மாநில வரைபடம்.**

மாநிலத்தில் பட்டுத்தொழிலின் மேம்பாட்டிற்காகவும், வளர்ச்சிக்காகவும் கீழ்க்காணும் இதர உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## 8.1 ஆதார பட்டுப்புழு விதை உற்பத்தி அலகுகள்

பட்டுப்புழுக்களின் இனப்பண்புகளை பி3, பி2 மற்றும் பி1 (பி=பெற்றோர்) ஆகிய மூன்று வித நிலைகளில் பராமரித்து உற்பத்தி செய்யப்படும் ஆதார விதைக்கூடுகளைக் கொண்டு, பட்டு விவசாயிகள் புழுவளர்ப்பு மேற்கொள்வதற்குத் தேவையான, வர்த்தகரீதியான பட்டுமுட்டைகள் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கென தெரிவு செய்யப்பட்ட, தனியாக அமைக்கப்பட்டுள்ள அரசு பட்டு விதைப்பண்ணைகளில் விதைக்கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

உள்நாட்டின மற்றும் இரு சுழற்சியின பட்டுப்புழுக்களின் இனப்பண்புகளை பராமரித்து விதைக்கூடுகள் உற்பத்தி செய்வதற்கென, இத்துறை பின்வரும் 19 விதைப்பண்ணைகளை தோற்றுவித்துள்ளது:

# விதைப் பண்ணைகள்

| மாவட்டம் | உதவி இயக்குநர் | வ.எண் | விதைப் பண்ணையின் பெயர் | நிலை | மொத்தப் பரப்பு (ஏக்கர்) |
|---|---|---|---|---|---|
| கிருஷ்ணகிரி | ஆவலப்பள்ளி | 1 | பேரிகை | பி3 | 3.67 |
| | | 2 | ஆவலப்பள்ளி | பி3 | 11.38 |
| | | 3 | ஓசூர் | பி2 | 44.72 |
| | கல்கொண்டப்பள்ளி | 4 | கல்கொண்டப்பள்ளி | பி3 | 5.65 |
| | | 5 | தளி | பி3 | 3.50 |
| | உத்தனப்பள்ளி | 6 | உத்தனப்பள்ளி | பி2 | 26.24 |
| | | 7 | உளிமங்கலம் | பி2 | 9.80 |
| | | 8 | மேலகிரி | பி2 | 10.20 |
| | கோலட்டி | 9 | கோலட்டி | பி1 | 868.55 |
| சேலம் | சேலம் | 10 | ஏற்காடு | பி2 | 5.96 |
| ஈரோடு | தாளவாடி | 11 | ஆசனூர் | பி2 | 9.00 |
| | மாதஹள்ளி | 12 | மாதஹள்ளி | பி1 | 785.29 |
| வேலூர் | திருவண்ணாமலை | 13 | அத்தனாவூர் | பி1 | 5.73 |
| நாமக்கல் | நாமக்கல் | 14 | கொல்லிமலை | பி1 | 13.10 |
| தேனி | தேனி | 15 | மயிலாடும்பாறை | பி2 | 10.00 |
| திருநெல்வேலி | தென்காசி | 16 | செங்கோட்டை | பி1 | 42.24 |
| நீலகிரி | குன்னூர் | 17 | குன்னூர் | பி3 | 25.25 |
| | | 18 | மசினகுடி | பி2 | 8.35 |
| | | 19 | மசக்கல் | பி2 | 18.95 |



மசினகுடி பி2 விதைப்பண்ணை

## 8.2 வித்தகங்கள்

மாநிலத்திற்குத் தேவையான பட்டு முட்டைகள் மாநில அரசின் 11 வித்தகங்கள் மற்றும் மத்திய அரசின் கீழ் செயல்படும் தேசிய பட்டுப்புழு விதை நிறுவனத்தின் 3 வித்தகங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்றன. கிருஷ்ணகிரி, ஓசூர், கோயம்புத்தூர், ஈரோடு, தாளவாடி, வாணியம்பாடி, தருமபுரி மற்றும் பென்னாகரம் ஆகிய அரசு வித்தகங்கள் இரு சுழற்சியின பட்டு முட்டைகளை உற்பத்தி செய்து வருகின்றன. தென்காசி மற்றும் திருச்சி ஆகிய அரசு வித்தகங்கள் கலப்பின பட்டு முட்டைகளை உற்பத்தி செய்து வருகின்றன.



**பட்டுப்பூச்சி முட்டை இடுதல்**

# வித்தகங்கள்

| மாவட்டம் | உதவி இயக்குநர் | வ.எண் | வித்தகத்தின் பெயர் | மாநில அரசு / மத்திய பட்டு வாரியம்* | உற்பத்தித் திறன் (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| கிருஷ்ணகிரி | ஒசூர் (வித்தகம்) | 1 | ஒசூர் | மாநில அரசு | 14.50 |
| | | * | ஒசூர் | மத்திய பட்டு வாரியம் | 14.00 |
| | கிருஷ்ணகிரி (வித்தகம்) | 2 | கிருஷ்ணகிரி | மாநில அரசு | 16.00 |
| தருமபுரி | தருமபுரி | 3 | சோகத்தூர் | மாநில அரசு | 3.00 |
| | | * | தருமபுரி | மத்திய பட்டு வாரியம் | 8.00 |
| | பென்னாகரம் | 4 | பென்னாகரம் | மாநில அரசு | 3.00 |
| கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | 5 | கோயம்புத்தூர் | மாநில அரசு | 8.00 |
| ஈரோடு | ஈரோடு | 6 | ஈரோடு | மாநில அரசு | 8.00 |
| | தாளவாடி | 7 | தாளவாடி | மாநில அரசு | 4.00 |
| வேலூர் | வாணியம்பாடி | 8 | வாணியம்பாடி | மாநில அரசு | 3.00 |
| | | * | திருப்பத்தூர் | மத்திய பட்டு வாரியம் | 8.00 |
| திருச்சி | திருச்சி | 9 | திருச்சி | மாநில அரசு | 4.00 |
| திண்டுக்கல் | திண்டுக்கல் | 10 | திண்டுக்கல் | மாநில அரசு | 3.00 |
| திருநெல்வேலி | தென்காசி | 11 | குற்றாலம் | மாநில அரசு | 4.00 |

## 8.3 அதி நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய பல்நிலை குளிர்பதன நிலையங்கள்

பட்டுப்புழுவானது பொதுவாக ஓர் ஆண்டில் ஒன்று, இரண்டு அல்லது பல வாழ்க்கை சுழற்சி முறைகளைக் கொண்டுள்ளது. இவை முறையே ஒரு சுழற்சி இனம், இரு சுழற்சி இனம் மற்றும் பல சுழற்சி இனம் என அழைக்கப்படுகிறது. துயில் நிலை அற்ற இனங்களில் (பல சுழற்சியினம்) முட்டைத் தொகுதிகள் முட்டையிட்ட நாளிலிருந்து 10 நாட்களிலும், துயில் நிலை இனங்களில் (ஒரு சுழற்சி இனம் மற்றும் இரு சுழற்சி இனம்) சுமார் 6–10 மாதங்கள் கழித்தும் முட்டை பொரித்துவிடும். வெற்றிகரமான பட்டுக்கூடு அறுவடைக்கு பட்டு முட்டையினை முறையாக பாதுகாப்பது அத்தியாவசியமானதாகும். பட்டு முட்டையின் முறையற்ற பாதுகாப்பு சீரான முட்டை பொரிப்பினை பாதிப்பதுடன் பட்டுப்புழுக்களின் ஆரோக்கியமான வளர்ச்சியினையும், தரமான பட்டுக்கூடு உற்பத்தியினையும் மட்டுப்படுத்துகின்றது.

இரு சுழற்சி இன பட்டுப்புழுக்கள் வருடத்திற்கு 2 வாழ்க்கை சுழற்சியினை கொண்டுள்ளன. இந்த பட்டு முட்டைத் தொகுதிகள் சாதாரண சூழலில் எதிர்பார்க்கும் நேரத்தில் பொரிப்பு ஆகாது என்ற தனித்தன்மை உடையவை.

எனவே, இரு சுழற்சியின பட்டுமுட்டைகள் சீரான முட்டை பொரிப்பிற்கு குளிர்பதன அறையில் 120 நாட்கள் முதல் 300 நாட்கள் வரையில் 2.5° செல்சியஸ் முதல் 25° செல்சியஸ் வரையிலான வெவ்வேறு வெப்ப நிலைகளில் பாதுகாப்பாக குளிர்பதனம் செய்வது அத்தியாவசியமாகிறது. இரு சுழற்சியின முட்டைத் தொகுதிகளை குளிர்பதனம் செய்வதன் மூலம் ஆண்டு முழுவதும் பட்டு விவசாயிகளின் தேவைக்கு ஏற்ப முட்டை விநியோகம் செய்வது எளிதாகின்றது.



**கிருஷ்ணகிரி இருசுழற்சி இன வித்தக**
**அதிநவீன குளிர்பதன நிலையம்**

பட்டு விவசாயிகளுக்கு தரமான இரு சுழற்சி கலப்பின பட்டு முட்டைகளை முறையாக பாதுகாத்து, பராமரித்து வழங்குவதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டு கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரில் அனைத்து நவீன வசதிகளையும் கொண்ட


பல்நிலை குளிர்பதன நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இரு சுழற்சியின பட்டுமுட்டைகள் இந்த குளிர்பதன நிலையத்தில் வெவ்வேறு வெப்ப நிலைகளிலும், தேவையான ஈரப்பதத்திலும் தொடர்ந்து பாதுகாக்கப்பட்டு வருகின்றன. எட்டு அறைகளைக் கொண்ட இந்த குளிர்பதன நிலையத்தில் 15.00 இலட்சம் பட்டு முட்டைத் தொகுதிகளைப் பாதுகாத்திட முடியும். கோயம்புத்தூர், ஓசூர், தாளவாடி மற்றும் ஈரோடு ஆகிய இரு சுழற்சியின வித்தகங்களில் உற்பத்தி செய்யப்படும் நோயற்ற பட்டுமுட்டைத் தொகுதிகள் இக்குளிர்பதன நிலையத்தில் நான்கு, ஆறு மற்றும் ஒன்பது மாத கால குளிர்பதன பாதுகாப்பு அட்டவணைகளின்படி முறையாக பாதுகாக்கப்படுவதுடன், விவசாயிகளுக்குத் தேவையான காலங்களில் விநியோகிக்கப்படுகின்றன.

மற்றொரு பல்நிலை குளிர்பதன நிலையம், கிருஷ்ணகிரியில் கிரியா ஊக்கித் திட்டத்தின் கீழ் ரூ.1.00 கோடி மதிப்பில் சமீபத்தில் அமைக்கப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி, வாணியம்பாடி, தருமபுரி மற்றும் பென்னாகரம் ஆகிய இருசுழற்சியின வித்தகங்களில் உற்பத்தி செய்யப்படும் நோயற்ற பட்டுமுட்டை தொகுதிகள் இக்குளிர்பதன நிலையத்தில் பாதுகாக்கப்படுகின்றன. இந்த இரு சுழற்சி இன பட்டுமுட்டைகள் விவசாயிகளுக்கு ஒற்றைச் சாளர முறையில்

கிருஷ்ணகிரி வித்தக உதவி இயக்குநர் மூலம் விநியோகிக்கப்படுகின்றன.



**கிருஷ்ணகிரி இருசூழற்சி இன வித்தகத்தின் குளிர்பதன நிலையத்திலுள்ள ஒரு அறையின் உட்புறத் தோற்றம்.**



**கிருஷ்ணகிரி இருசூழற்சி இன வித்தகத்தின் குளிர்பதன அறையில் உதிரி முட்டைகள் பாதுகாத்தல்**

2015–2016–ஆம் ஆண்டில் சுமார் 50.95 இலட்சம் இரு சுழற்சியின முட்டை தொகுதிகள் இக்குளிர்பதன நிலையங்களில் பாதுகாக்கப்பட்டன. 90 சதவீதத்திற்கும் அதிகமான பட்டு விவசாயிகள் கூடுதல் வருமானம் பெற்றிடும் நோக்கில் இரு சுழற்சியின பட்டு முட்டைத் தொகுதிகளையே வளர்க்கின்றனர்.

## 8.4 தொழில்நுட்ப சேவை மையங்கள்

மல்பரி சாகுபடி மற்றும் பட்டுப்புழு வளர்ப்பு குறித்த தொழில்நுட்ப ஆலோசனைகளை பட்டு விவசாயிகளுக்கு வழங்குவதற்காக மாநிலத்தில் கீழ்க்கண்டவாறு 105 தொழில்நுட்ப சேவை மையங்கள் செயல்பட்டு வருகின்றன:

**தொழில் நுட்ப சேவை மையங்கள்**

| மண்டலம் | மாவட்டங்கள் | வ.எண் | உதவி இயக்குநர் | தொழில் நுட்ப சேவை மையங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| தருமபுரி | கிருஷ்ணகிரி | 1 | ஓசூர் | 7 |
| | | 2 | தேன்கனிக்கோட்டை | 6 |
| | | 3 | கிருஷ்ணகிரி | 4 |
| | தருமபுரி | 4 | தருமபுரி | 4 |
| | | 5 | பென்னாகரம் | 6 |
| ஈரோடு | சேலம் | 6 | சேலம் | 7 |
| | கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு | 7 | கோயம்புத்தூர் | 4 |
| | | 8 | உடுமலைப்பேட்டை | 5 |
| | | 9 | ஈரோடு | 7 |
| | | 10 | தாளவாடி | 3 |
| | நீலகிரி | 11 | குன்னூர் | 1 |

| மண்டலம் | மாவட்டங்கள் | வ.எண் | உதவி இயக்குநர் | தொழில் நுட்ப சேவை மையங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| வேலூர் | வேலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், | 12 | வாணியம்பாடி | 8 |
| | திருவண்ணாமலை மற்றும் வேலூர் மாவட்ட மலைப்பகுதிகள் | 13 | திருவண்ணாமலை | 6 |
| | விழுப்புரம், கடலூர் | 14 | விழுப்புரம் | 4 |
| திருச்சி | திருச்சி, புதுக்கோட்டை, அரியலூர், திருவாரூர் தஞ்சாவூர், பெரம்பலூர், நாகப்பட்டிணம். | 15 | திருச்சி | 8 |
| | நாமக்கல், கரூர் | 16 | நாமக்கல் | 7 |
| மதுரை | திண்டுக்கல், சிவகங்கை. | 17 | திண்டுக்கல் | 6 |
| | தேனி, மதுரை, இராமநாதபுரம் | 18 | தேனி | 5 |
| | திருநெல்வேலி, விருதுநகர், தூத்துக்குடி, கன்னியாகுமரி. | 19 | தென்காசி | 7 |
| | | | மொத்தம் | 105 |



**அரூர் தொழில்நுட்ப சேவை மையம், தருமபுரி மாவட்டம்**

ஒவ்வொரு தொழில்நுட்ப சேவை மையமும் ஆய்வாளர் அல்லது உதவி ஆய்வாளர் தலைமையில் 5 அல்லது அதற்கு மேற்பட்ட சார்சரகங்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு சார்சரகமும் ஒரு இளநிலை ஆய்வாளரின் கண்காணிப்பில் செயல்பட்டு வருகிறது.

## 8.5 அரசு பட்டுப்பண்ணைகள்

தமிழகத்தில் 6 வீரிய இன பட்டுப்பண்ணைகளும், 6 செயல்விளக்கம் மற்றும் பயிற்சி மையங்களும், 5 மாதிரி மல்பரி பட்டுப்பண்ணைகளும், 10 விவசாயிகள் பயிற்சி மையங்களும் மற்றும் 4 இளம்புழு வளர்ப்பு பண்ணைகளும் செயல்பட்டு வருகின்றன. மல்பரி நாற்று உற்பத்தி, இளம்புழு விநியோகம்

மற்றும் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தல் ஆகிய பணிகள் இப்பண்ணைகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



**உளிமங்கலம் பி2 அரசு விதைப்பண்ணை**

**அரசு பட்டுப் பண்ணைகள்**

| மாவட்டம் | உதவி இயக்குநர் | வ.எண் | அரசு பட்டுப் பண்ணையின் பெயர் | | மொத்த பரப்பு (ஏக்கர்) |
|---|---|---|---|---|---|
| கிருஷ்ணகிரி | தமிழ்நாடு பட்டு வளர்ச்சி பயிற்சி நிலையம், ஓசூர் | 1 | ஓசூர் | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் | 2.18 |
| | கிருஷ்ணகிரி | 2 | ஊத்தங்கரை | கலப்பின பட்டுப் பண்ணை | 3.72 |
| தருமபுரி | தருமபுரி | 3 | சித்தேரி | கலப்பின பட்டுப் பண்ணை | 5.79 |
| | | 4 | சோகத்தூர் | விவசாயிகள் பயிற்சி மையம் | 5.84 |
| | பென்னாகரம் | 5 | பாப்பாரப்பட்டி | இளம்புழு வளர்ப்பு பண்ணை | 1.81 |

| மாவட்டம் | உதவி இயக்குநர் | வ.எண் | அரசு பட்டுப் பண்ணையின் பெயர் | | மொத்த பரப்பு (ஏக்கர்) |
|---|---|---|---|---|---|
| சேலம் | சேலம் | 6 | நத்தக்கரை | விவசாயிகள் பயிற்சி மையம் | **14.50** |
| | | 7 | மணியார் குண்டம் | கலப்பின பட்டுப்பண்ணை | **50.00** |
| | | 8 | புதூர் | கலப்பின பட்டுப்பண்ணை | **6.04** |
| விழுப்புரம் | சேலம் | 9 | வெள்ளிமலை | கலப்பின பட்டுப்பண்ணை | **6.56** |
| ஈரோடு | தாளவாடி | 10 | தாளவாடி | விவசாயிகள் பயிற்சி மையம் | **18.01** |
| | | 11 | இராமாபுரம் | இளம்புழு வளர்ப்பு பண்ணை | **3.58** |
| திருப்பூர் | உடுமலைப் பேட்டை | 12 | மைவாடி | விவசாயிகள் பயிற்சி மையம் | **20.10** |
| காஞ்சிபுரம் | வாணியம்பாடி | 13 | விச்சந்தாங்கல் | விவசாயிகள் பயிற்சி மையம் | **8.05** |
| வேலூர் | வாணியம்பாடி | 14 | மின்னூர் | விவசாயிகள் பயிற்சி மையம் | **18.70** |
| திருவண்ணா மலை | திருவண்ணா மலை | 15 | நாடானூர் | இளம்புழு வளர்ப்பு பண்ணை | **1.88** |
| வேலூர் | | 16 | புலியூர் | இளம்புழு வளர்ப்பு பண்ணை | **7.99** |
| கடலூர் | விழுப்புரம் | 17 | நெய்வேலி | விவசாயிகள் பயிற்சி மையம் | **20.00** |
| திருச்சி | திருச்சி | 18 | உப்பிலியாபுரம் | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் | **2.60** |
| | | 19 | கலிங்கப்பட்டி | மாதிரி மல்பரி பட்டுப்பண்ணை | **5.00** |
| | | 20 | கருக்கமடை | மாதிரி மல்பரி பட்டுப்பண்ணை | **2.11** |
| | | 21 | பச்சைமலை | கலப்பின பட்டுப்பண்ணை | **8.45** |
| | | 22 | மணிகண்டம் | விவசாயிகள் பயிற்சி மையம் | **10.00** |
| தஞ்சாவூர் | | 23 | நாஞ்சிக் கோட்டை | விவசாயிகள் பயிற்சி மையம் | **4.65** |

| மாவட்டம் | உதவி இயக்குநர் | வ.எண் | அரசு பட்டுப் பண்ணையின் பெயர் | | மொத்த பரப்பு (ஏக்கர்) |
|---|---|---|---|---|---|
| திண்டுக்கல் | திண்டுக்கல் | 24 | சி.கே.புதூர் | மாதிரி மல்பரி பட்டுப்பண்ணை | 4.93 |
| சிவகங்கை | | 25 | குன்றக்குடி | மாதிரி மல்பரி பட்டுப்பண்ணை | 6.20 |
| | | 26 | ஓ.புதூர் | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் | 10.00 |
| இராமநாதபுரம் | தேனி | 27 | பாண்டியூர் | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் | 4.36 |
| திருநெல்வேலி | தென்காசி | 28 | திருநெல்வேலி | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் | 1.88 |
| விருதுநகர் | | 29 | திருவில்லி–புத்தூர் | விவசாயிகள் பயிற்சி மையம் | 10.15 |
| | | 30 | செவலூர் | மாதிரி மல்பரி பட்டுப்பண்ணை | 12.00 |
| கன்னியா குமரி | | 31 | நாகர்கோவில்/ கோணம் | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் | 3.10 |

## 8.6 இளம்புழு வளர்ப்பு மையங்கள்

முட்டை பொரிப்பிலிருந்து 7 நாட்கள் வரை இளம்புழுக்களை தனியாக வளர்த்து பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யும் மையங்கள் இளம்புழு வளர்ப்பு மையங்கள் என அழைக்கப்படுகின்றன. இளம்புழுவளர்ப்பு மையங்களில், இளம்புழுக்கள் மிகுந்த கவனத்துடன், சுகாதாரமான, தனி இளம்புழு வளர்ப்பு மனைகளில் வளர்க்கப்படுகின்றன. பட்டுமுட்டைகள் அடைகாத்தலிருந்து பட்டுப்புழுக்களை

இரண்டாம் தோலுரிப்பு வரை வளர்த்திட 10 நாட்கள் ஆகும். அதற்குப்பின் இளம்புழுக்கள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன.



**இளம்புழு வளர்ப்பு மையம், திண்டுக்கல்**

வித்தகத்திலிருந்து பெறப்படும் பட்டுமுட்டைகள், 25 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையிலும் 80 சதவீத ஈரப்பதத்திலும் அடைகாக்கப்படுகின்றன. பட்டு முட்டைகளிலிருந்து பொரித்த புழுக்களுக்கு சரியான இடைவேளைகளில், மிகவும் சிறியதாக வெட்டப்பட்ட, தரமான மல்பரி இலைகள் உணவாக அளிக்கப்படுவதுடன், பட்டுப்புழு வளர்ப்பு அறையில் இளம் பட்டுப்புழுக்களுக்குத் தேவையான வெப்பநிலையும், ஈரப்பதமும் உரிய அளவில்

பராமரிக்கப்படுகின்றன. இளம் புழுவளர்ப்பின்பொழுது பட்டுப்புழுக்களுக்கு போதுமான படுக்கை இடவசதி அளித்தல், சுத்தம் செய்தல், தோலுரிப்பு மற்றும் படுக்கை கிருமிநாசினிகள் பயன்பாடு ஆகியனவற்றின் மீது மிகுந்த கவனம் செலுத்தப்படுகிறது. தற்பொழுது தமிழ்நாட்டில் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும் பட்டு முட்டைத் தொகுதிகளில் 64 சதவீதம் இளம் பட்டுப்புழுக்களாக உபயோகிக்கப்படுகின்றன.

பட்டு முட்டைகளுக்குப் பதிலாக இளம்புழுக்களை பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்வது பட்டுக்கூடுகளின் உற்பத்தியை அதிகரித்து, அதன் மூலம் விவசாயிகள் அதிக வருவாய் ஈட்டுவதை உறுதி செய்கிறது. முட்டையிலிருந்து பட்டுக்கூடு நிலை வரை தேவைப்படும் 25 முதல் 27 நாட்களுக்குப் பதிலாக இளம்புழுக்களாக பெற்று வளர்ப்பதன் மூலம் பட்டுக்கூடு பெற 16 முதல் 18 நாட்கள் மட்டுமே ஆவதால், விவசாயிகள் கூடுதல் எண்ணிக்கையில் புழுவளர்ப்புகள் மேற்கொள்வது சாத்தியமாகிறது.

இளம்புழுக்களை வளர்த்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்திட, தற்பொழுது மாநிலத்தில் கீழ்க்கண்டவாறு 4 அரசு இளம்புழு வளர்ப்பு மையங்களும் 19 அரசு பட்டுப்பண்ணைகளும் செயல்பட்டு வருகின்றன.

# இளம்புழு வளர்ப்பு மையங்கள்

| வ.எண் | மாவட்டம் | உதவி இயக்குநர் | அரசு பட்டுப் பண்ணையின் பெயர் | நிலை |
|---|---|---|---|---|
| 1 | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி | ஊத்தங்கரை | அரசு கலப்பின பட்டுப்பண்ணை |
| 2 | தருமபுரி | தருமபுரி | சோகத்தூர் | விவசாயிகள் பயிற்சி மையம் |
| 3 | தருமபுரி | பென்னாகரம் | பாப்பாரப்பட்டி | இளம்புழு வளர்ப்பு பண்ணை |
| 4 | ஈரோடு | தாளவாடி | இராமாபுரம் | இளம்புழு வளர்ப்பு பண்ணை |
| 5 | ஈரோடு | மாதஹள்ளி | மாதஹள்ளி | அரசு பட்டுப்பண்ணை |
| 6 | சேலம் | சேலம் | நத்தக்கரை | விவசாயிகள் பயிற்சி மையம் |
| 7 | வேலூர் | வாணியம்பாடி | மின்னூர் | விவசாயிகள் பயிற்சி மையம் |
| 8 | காஞ்சிபுரம் | வாணியம்பாடி | விச்சந்தாங்கல் | விவசாயிகள் பயிற்சி மையம் |
| 9 | வேலூர் | திருவண்ணா மலை | புலியூர் | இளம்புழு வளர்ப்பு பண்ணை |
| 10 | திருவண்ணா மலை | திருவண்ணா மலை | நாடானூர் | இளம்புழு வளர்ப்பு பண்ணை |
| 11 | கடலூர் | விழுப்புரம் | நெய்வேலி | விவசாயிகள் பயிற்சி மையம் |
| 12 | திருச்சி | திருச்சி | உப்பிலியாபுரம் | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் |
| 13 | திருச்சி | திருச்சி | மணிகண்டம் | விவசாயிகள் பயிற்சி மையம் |
| 14 | திருச்சி | திருச்சி | கலிங்கப்பட்டி | மாதிரி மல்பரி பட்டுப்பண்ணை |
| 15 | திருச்சி | திருச்சி | கருக்கமடை | மாதிரி மல்பரி பட்டுப்பண்ணை |
| 16 | தஞ்சாவூர் | திருச்சி | நாஞ்சிக் கோட்டை | விவசாயிகள் பயிற்சி மையம் |
| 17 | திண்டுக்கல் | திண்டுக்கல் | சி.கே.புதூர் | மாதிரி மல்பரி பட்டுப்பண்ணை |
| 18 | சிவகங்கை | திண்டுக்கல் | ஓ. புதூர் | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் |

| வ.எண் | மாவட்டம் | உதவி இயக்குநர் | அரசு பட்டுப் பண்ணையின் பெயர் | நிலை |
|---|---|---|---|---|
| 19 | இராமநாதபுரம் | தேனி | பாண்டியூர் | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் |
| 20 | திருநெல்வேலி | தென்காசி | திருநெல்வேலி (இ) வி.எம்.சத்திரம் | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் |
| 21 | விருதுநகர் | தென்காசி | செவலூர் | மாதிரி மல்பரி பட்டுப்பண்ணை |
| 22 | விருதுநகர் | தென்காசி | ஸ்ரீவில்லிபுத்தூர் | விவசாயிகள் பயிற்சி மையம் |
| 23 | கன்னியா குமரி | தென்காசி | நாகர்கோவில் (இ) கோணம் | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் |

இவை தவிர, 135 தனியார் இளம்புழு வளர்ப்பு மையங்கள் மாநிலத்தில் செயல்படுகின்றன. இம்மையங்கள் தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்ட நிதி உதவியுடனும் கிரியா ஊக்கித் திட்டத்தின் கீழும் நிறுவப்பட்டுள்ளன.

இந்த இளம்புழு வளர்ப்பு மையங்கள், பட்டு விவசாயிகளுக்கு புதிய தொழில்நுட்பங்களைக் கொண்டு செல்லும் சிறப்பு மையங்களாக மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளன.

## 8.7 அரசு பட்டுக்கூடு அங்காடிகள்

விவசாயிகள் உற்பத்தி செய்த பட்டு நூற்புக்குரிய பட்டுக்கூடுகளை வர்த்தகம் செய்ய, மாநிலத்தில் 20 அரசு பட்டுக்கூடு அங்காடிகள் செயல்பட்டு வருகின்றன. பட்டுக்கூடுகளின் தர அடிப்படையில், கூடுகளுக்கான

அடிப்படை விலையானது, பட்டுக்கூடு அங்காடி அலுவலர், பட்டு விவசாயப் பிரதிநிதி மற்றும் பட்டுநூற்பாளர் பிரதிநிதி ஆகியோர் அடங்கிய குழுவினால் நிர்ணயிக்கப்படுகிறது. பட்டுக்கூடுகளை கொள்முதல் செய்ய அரசு அலகுகளும், தனியார் பட்டுநூற்பாளர்களும் வெளிப்படையான ஏலத்தில் பங்கு கொள்ள அனுமதிக்கப்படுகின்றனர். மேலும், 3 இடங்களில் செயல்படும் விதைப்பட்டுக்கூடு அங்காடிகளில், விதைக்கூடுகள் வர்த்தகம் நடைபெற்று வருகிறது. விதைப் புழுவளர்ப்பாளர்களால் விற்கப்படும் விதைக்கூடுகள், வர்த்தக ரீதியில் முட்டை உற்பத்தி செய்திட வித்தகங்களால் கொள்முதல் செய்யப்படுகின்றன.



**வெளிப்படையான ஏலம் – தருமபுரி பட்டுக்கூடு அங்காடி**

இந்த பட்டுக்கூடு வர்த்தகத்தின் மூலம் விற்பவர் மற்றும் வாங்குபவரிடமிருந்து பட்டுக்கூட்டின் மதிப்பில் **0.75** சதவீதம் தீர்வையாக துறை வசூலித்து வருகிறது.

## அரசு பட்டுக்கூடு அங்காடிகள்

| மாவட்டம் | உதவி இயக்குநர் | வ.எண் | அரசு பட்டுக்கூடு அங்காடியின் பெயர் | |
|---|---|---|---|---|
| கிருஷ்ணகிரி | ஆவலப்பள்ளி | 1 | ஓசூர் | விதை |
| | ஓசூர் | 2 | ஓசூர் | நூற்பு |
| | தேன்கனிக் கோட்டை | 3 | தேன்கனிக்–கோட்டை | விதை |
| | கிருஷ்ணகிரி | 4 | கிருஷ்ணகிரி | நூற்பு |
| தருமபுரி | பென்னாகரம் | 5 | பென்னாகரம், பாலக்கோடு | நூற்பு |
| | தருமபுரி | 6 | தருமபுரி | நூற்பு |
| சேலம் | சேலம் | 7 | சேலம் | நூற்பு |
| கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | 8 | கோயம்புத்தூர் | விதை |
| | | 9 | கோயம்புத்தூர் | நூற்பு |
| ஈரோடு | தாளவாடி | 10 | தாளவாடி | நூற்பு |
| | ஈரோடு | 11 | ஈரோடு | நூற்பு |
| திருப்பூர் | உடுமலைப் பேட்டை | 12 | உடுமலைப்–பேட்டை | நூற்பு |
| வேலூர் | வாணியம் பாடி | 13 | வாணியம்பாடி | நூற்பு |
| திருவண்ணா மலை | திருவண்ணா மலை | 14 | திருவண்ணா மலை | நூற்பு |
| திருச்சி | திருச்சி | 15 | திருச்சி | நூற்பு |
| புதுக்கோட்டை | திருச்சி | 16 | புதுக்கோட்டை | நூற்பு |
| திண்டுக்கல் | திண்டுக்கல் | 17 | திண்டுக்கல் | நூற்பு |
| | | 18 | பழனி(இ) சி.கே.புதூர் | நூற்பு |
| சிவகங்கை | | 19 | சிவகங்கை | நூற்பு |
| தேனி | தேனி | 20 | தேனி | நூற்பு |
| திருநெல்வேலி | தென்காசி | 21 | நன்னகரம் | நூற்பு |
| விருதுநகர் | | 22 | திருவில்லிபுத்தூர் | நூற்பு |
| கன்னியாகுமரி | | 23 | நாகர்கோவில் | நூற்பு |

## 8.8 அரசு பட்டு நூற்பு / பட்டு முறுக்கேற்றும் அலகுகள்

பட்டுக்கூடு அறுவடைக்கு பின் மேற்கொள்ளப்படும் பட்டு நூற்பு மற்றும் பட்டு முறுக்கேற்றும் பணிகளுக்கு உதவுவதற்காக, கீழ்க்கண்டவாறு **8** பலமுனை நூற்பு அலகுகள் மற்றும் **3** பட்டு முறுக்கேற்றும் அலகுகள், புதிய தொழில்முனைவோர்களுக்கு மாதிரி அலகுகளாகவும், விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் பட்டுக்கூடுகளுக்கு நியாயமான விலை கிடைக்க உதவும் வகையிலும் செயல்படுகின்றன.

**அரசு பட்டு நூற்பு மற்றும் பட்டு முறுக்கேற்றும் அலகுகள்**

| வ.எண் | மாவட்டம் | உதவி இயக்குநர் | அலகின் பெயர் | இடம் |
|---|---|---|---|---|
| 1 | கிருஷ்ணகிரி | ஒசூர் | பட்டு நூற்பு மற்றும் முறுக்கேற்றும் அலகு | ஒசூர் |
| 2 | சேலம் | சேலம் | பட்டு நூற்பு மற்றும் முறுக்கேற்றும் அலகு | சேலம் |
| 3 | ஈரோடு | தாளவாடி | பட்டு நூற்பகம் | தாளவாடி |
| 4 | வேலூர் | வாணியம்பாடி | பட்டு நூற்பகம் | வாணியம்பாடி |
| 5 | திருநெல்வேலி | தென்காசி | பட்டு நூற்பு மற்றும் முறுக்கேற்றும் அலகு | நன்னகரம் |
| 6 | கன்னியாகுமரி | தென்காசி | பட்டு நூற்பகம் | கோணம் |
| 7 | சிவகங்கை | திண்டுக்கல் | பட்டு நூற்பகம் | சிவகங்கை |
| 8 | புதுக்கோட்டை | திருச்சி | பட்டு நூற்பகம் | புதுக்கோட்டை |



அரசு பலமுனை பட்டு நூற்பு அலகு – நன்னகரம்



அரசு பட்டு முறுக்கேற்றும் அலகு – நன்னகரம்

## 8.9 தனியார் பட்டு நூற்பகங்கள்

பட்டுக்கூடுகளின் நுகர்வினை அதிகரிக்கவும், பட்டு விவசாயிகளின் வர்த்தகத்தினை பெருக்கிடவும், அதிக அளவில் தனியார் பட்டுநூற்பு அலகுகளை நிறுவிட தொழில்முனைவோர்களை ஊக்குவிக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் பட்டு வளர்ச்சித்துறை எடுத்து வருகிறது. தற்போது 30 பலமுனை பட்டுநூற்பு அலகுகள், 97 காட்டேஜ் பேசின் பட்டுநூற்பு அலகுகள், 28 சர்க்கா பட்டு நூற்பு அலகுகள் மற்றும் ஒரு தானியங்கி பட்டுநூற்பு அலகு ஆகியவை தனியார் பட்டு நூற்பாளர்களால் இயக்கப்பட்டு வருகின்றன.



**அவிநாசியில் தானியங்கி பட்டு நூற்பு அலகு**

## 8.10 தமிழ்நாடு பட்டுவளர்ச்சி பயிற்சி நிலையம், ஓசூர்

துறையின் களப்பணியாளர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி அளிப்பதற்காகவும், புதிய விவசாயிகள் மற்றும் பட்டுநூற்பாளர்களுக்கு பயிற்சி அளிக்கவும் ஓசூரில் தமிழ்நாடு பட்டுவளர்ச்சி பயிற்சி நிலையம் அனைத்து உட்கட்டமைப்புகளுடனும் தங்கும் விடுதிகளுடனும் செயல்பட்டு வருகிறது.

பட்டுத்தொழிலின் நவீன தொழில்நுட்பங்களை பட்டு விவசாயிகளுக்கும், பட்டு நூற்பாளர்களுக்கும் கொண்டு செல்ல “பட்டு மலர்” என்ற பட்டுவளர்ச்சித் துறையின் மாத இதழினையும் இந்நிலையம் வெளியிட்டு வருகிறது.



**ஓசூரில் தமிழ்நாடு பட்டுவளர்ச்சி பயிற்சி நிலைய புதிய கட்டடம்**

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிவிப்புகளின்படி, ரூ.200 இலட்சம் மதிப்பீட்டில் பயிற்சி நிலைய அலுவலகம், பயிற்சி வகுப்புகள் மற்றும் விடுதி வசதிகளுடன் கூடிய கட்டடம் 2015–ஆம் ஆண்டில் கட்டப்பட்டது.



**பயிற்சி வகுப்பில் விவசாயிகள்**

## 8.11 அரசு அண்ணா பட்டு பரிமாற்றகம், காஞ்சிபுரம்

அரசு அண்ணா பட்டு பரிமாற்றகம், பட்டு நூற்பாளர்களால் உற்பத்தி செய்யப்படும் பட்டு நூலை சந்தைப்படுத்தும் மையமாக உள்ளது. இம்மையம் 1991–ஆம் ஆண்டு முதல் காஞ்சிபுரத்தில் செயல்பட்டு வருகிறது. பட்டு பரிமாற்றகத்திற்கு விற்பனைக்காக கொண்டுவரப்படும் அனைத்து பட்டுநூல் தொகுதிகளும், காஞ்சிபுரம் மத்திய பட்டு வாரிய "பட்டு பதப்படுத்துதல் மற்றும் பரிசோதனை நிலையம்"

மூலம் தர பரிசோதனை செய்யப்பட்டு, தரத்தின் அடிப்படையில் அடிப்படை விலை நிர்ணயிக்கப்படுகிறது.



**காஞ்சிபுரம் அண்ணா பட்டு பரிமாற்றகத்தில் பட்டு நூல் ஏலம்.**

அதன் பிறகு பட்டுநூல் தொகுதிகள் வெளிப்படையான ஏலத்திற்கு உட்படுத்தப்படுகின்றன. தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியாளர் இணையம் (டான்சில்க்), முதன்மை நெசவாளர்கள், பட்டு முறுக்காளர்கள் ஏலத்தில் பங்கேற்று கச்சாப்பட்டினை கொள்முதல் செய்கின்றனர். பட்டு பரிமாற்றகத்தில், பட்டுநூல் விற்பனை செய்தமைக்கான தொகை, நூற்பாளர்களுக்கு மின்னணு வர்த்தக சேவை மூலமாக உடனே வழங்கப்படுகிறது.

## 8.12 தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியாளர் இணையம் (டான்சில்க்), காஞ்சிபுரம்

தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியாளர் இணையம் (டான்சில்க்) தமிழ்நாட்டிலுள்ள பட்டுக்கூட்டுறவு சங்கங்களின் தலைமை கூட்டுறவு இணையமாக, காஞ்சிபுரத்தினை தலைமையிடமாகக் கொண்டு 1978–ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இந்த இணையம், காஞ்சிபுரத்திலுள்ள அண்ணா பட்டு பரிமாற்றகத்திலிருந்து அதிக அளவு கச்சாப்பட்டினை கொள்முதல் செய்கிறது. ஆரணி, கோயம்புத்தூர், ஈரோடு, காஞ்சிபுரம், கும்பகோணம் மற்றும் சேலம் ஆகிய 6 இடங்களில் இந்த இணையத்தின் கிளைகள் செயல்பட்டு வருகின்றன. பட்டு நூற்பாளர்கள், பட்டு முறுக்காளர்கள் மற்றும் பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் இதில் உறுப்பினர்களாக உள்ளனர்.

இந்நிறுவனம், நியாயமான விலையில் தரமான முறுக்கேற்றிய பட்டினை, பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் மற்றும் சான்றுபெற்ற சர்வோதய சங்கங்கள் போன்ற நிறுவனங்களுக்கு விநியோகம் செய்து வருகிறது. இம்மையம் மூலம் கொள்முதல் செய்யப்படும் முறுக்கேற்றிய பட்டு, புடவைகளாகவும், வேட்டிகளாகவும் மற்றும்

இதர பட்டுத்துணிகளாகவும் நெசவு செய்யப்பட்டு, அவை தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு சங்கம் லிமிடெட் (கோ–ஆப்டெக்ஸ்) கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் அங்காடிகள் மற்றும் தனியார் விற்பனை மையங்கள் மூலமாக விற்பனை செய்யப்படுகின்றன.

## 9. தமிழ்நாட்டில் மல்பரி சாகுபடி

2015–2016–ஆம் ஆண்டில் 8,000 ஏக்கர் மல்பரி சாகுபடி என்ற இலக்கினைக் கடந்து 12,575 ஏக்கர் பரப்பில் மல்பரி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. 2016–2017–ஆம் ஆண்டில் கூடுதலாக 10,000 ஏக்கர் பரப்பில் மல்பரி சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

## 10. வெண்பட்டு / கலப்பின பட்டு உற்பத்தி

கலப்பின பட்டுக் கூடுகளிலிருந்து (மஞ்சள் பட்டுக்கூடுகள்) உற்பத்தி செய்யப்படும் கச்சாப் பட்டு நூல் தரத்தில் குறைவானது என்பதால் அதனை விசைத்தறியில் பயன்படுத்த இயலாது. தரமான கச்சாப் பட்டு நூல் உற்பத்தி செய்வதற்காக வெண்பட்டுக் கூடுகள் உருவாக்கப்பட்டன. ஒரு வெண்பட்டுக் கூட்டிலுள்ள பட்டு இழையின் நீளம் 1000 முதல் 1200 மீட்டர் ஆகும். ஆனால் கலப்பின மஞ்சள் பட்டு இழையின் நீளம் 700–800 மீட்டர் மட்டுமே. வெண்பட்டு நூல் மஞ்சள் பட்டு

இழையை விட அதிக வலுவுடனும், நீட்சித் தன்மையுடனும் இருப்பதால் விசைத்தறிகளில் பயன்படுத்தப்படுகிறது.

2015–2016–ஆம் ஆண்டில் மொத்த கச்சாப் பட்டுநூல் உற்பத்தியான 1898 மெட்ரிக் டன்னில் 1532 மெட்ரிக் டன் வெண்பட்டுநூல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. **வெண்பட்டுக்கூடு உற்பத்தியில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதலிடம் வகிக்கிறது.**

## 11. பயிர்க் காப்பீடு

சில இரைவிழுங்கிகளுக்கு பட்டுப்புழு உணவாக உள்ளது. சில பூச்சிகள் உணவு மற்றும் பிற காரணங்களுக்காக பட்டுப்புழுக்களை தாக்குவதால் பட்டுப்புழு வளர்ப்பில் இழப்பு ஏற்படுகிறது. இவ்விழப்பினை ஈடுசெய்யவும், பட்டு விவசாயிகளை பட்டுப்புழு வளர்ப்பு மேற்கொள்ள ஊக்கப்படுத்தவும், பயிர்க் காப்பீடு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பட்டு விவசாயிகளுக்கு காப்பீட்டு பிரீமியத் தொகையில் 90 சதவீதம் வழங்கப்படுகிறது. 20000 விவசாயிகள் பயன்பெறும் வகையில் ஒரு விவசாயிக்கு 100 பட்டு முட்டை தொகுதிகள் வளர்ப்பு செய்ய, கலப்பின பட்டு வளர்ப்பு விவசாயிக்கு ரூ.149/–ம், வெண்பட்டு வளர்ப்பு விவசாயிக்கு ரூ.164/–ம்

செலுத்தப்படுகிறது. புழுவளர்ப்பு பாதிக்கப்படும் பட்சத்தில், காப்பீடு நிறுவனத்தால் பட்டு விவசாயிகளுக்கு, பட்டுப்புழு இறந்த பருவத்தின் அடிப்படையில், இழப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது.

## 12. 2015–2016 –ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட்ட திட்டங்கள்

### 12.1 மாநில திட்டம்

இந்திய அரசாங்கத்தின் "ஜவுளி அமைச்சகம்" கிரியா ஊக்கித் திட்டத்தின் கீழ் வழங்கி வந்த நிதி உதவியில் பல திட்டங்களுக்கான நிதியுதவியை 2015–2016–ஆம் ஆண்டு முதல் நிறுத்தி விட்டது. இருப்பினும், பட்டு விவசாயிகளின் நலனை பாதுகாக்கும் வகையில் மாநில அரசு சில முக்கிய திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்திட மத்திய அரசின் பங்கினையும் சேர்த்து வழங்க முடிவெடுத்துள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் விதி 110–ன் கீழ் விடுத்த அறிவிப்பின்படி, 2015–2016–ஆம் ஆண்டு கீழ்க்கண்டவாறு ரூ.22.55 கோடி நிதியினை வழங்க அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது.

| வ.எண் | திட்டத்தின் பெயர் | இயல்பு | அலகு மதிப்பீடு ரூ. | திட்ட தொகை ரூ. இலட்சத்தில் | நிதி ஒதுக்கீடு (ரூ.இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | மாநில அரசின் பங்குத் தொகை | பயனாளியின் பங்குத் தொகை |
| 1 | உயர் விளைச்சல் தரும் மல்பரி இரகங்களை பயிரிட உதவி அளித்தல் | 5000.00 ஏக்கர் | 14,000 | 700.00 | 525.00 (75%) | 175.00 (25%) |
| 2 | புழுவளர்ப்பு தளவாடங்கள் வழங்குதல் | 1000 எண்ணிக்கை | 70,000 | 700.00 | 525.00 (75%) | 175.00 (25%) |
| 3 | புழுவளர்ப்பு மனை நிறுவுதல் நிலை–I | 180 எண்ணிக்கை | 2,75,000 | 495.00 | 148.50 (30%) | 346.50 (70%) |
| 4 | புழுவளர்ப்பு மனை நிறுவுதல் நிலை–II | 570 எண்ணிக்கை | 1,75,000 | 997.50 | 498.75 (50%) | 498.75 (50%) |
| 5 | புழுவளர்ப்பு மனை நிறுவுதல் நிலை–III | 250 எண்ணிக்கை | 90,000 | 225.00 | 157.50 (70%) | 67.50 (30%) |
| 6 | சொட்டு நீர்ப்பாசனம் அமைத்தல் | 1400.00 ஏக்கர் | 30,000 | 400.00 | 400.00 (100%) | – |
| | மொத்தம் | | | 3517.50 (அ) 3518.00 | 2254.75 (அ) 2255.00 | 1262.75 (அ) 1263.00 |

**2015–2016–ஆம் ஆண்டில் மாநில அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியின் அளவு பட்டுவளர்ச்சித்துறை வரலாற்றிலேயே மிகவும் அதிகபட்சமான ஒதுக்கீடு ஆகும்.**



அரசால் வழங்கப்பட்ட தண்டு அறுவடை கருவியை
விவசாயி பயன்படுத்துதல்



திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டையில் மல்பரி தோட்டத்தில்
அரசு உதவியுடன் நிறுவப்பட்ட சொட்டு நீர்ப்பாசன அமைப்பு



திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டையில் அரசு உதவியுடன் நிறுவப்பட்ட மல்பரி தோட்டம் மற்றும் புழுவளர்ப்புமனை



தருமபுரி மாவட்ட விவசாயியின் பட்டுப் புழு வளர்ப்பு மனையின் உட்புறத் தோற்றம்

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் அவர்கள் 2015–2016–ஆம் ஆண்டில் கீழ்க்காணும் அறிவிப்புகளை சட்டமன்றக் கூட்டத்தொடரில் அறிவித்துள்ளார்கள்:

1. அத்தியாவசியப் பணியிடங்களான இளநிலை ஆய்வாளர் மற்றும் உதவி ஆய்வாளர் பணியிடங்களை நிரப்புதல்.
2. 5 காட்டேஜ் பேசின் பட்டுநூற்பு நிலையங்களை பலமுனை பட்டுநூற்பு நிலையங்களாக தரம் உயர்த்துதல்.
3. பட்டுப்புழுவளர்ப்பு மற்றும் சொத்துகளுக்கு காப்பீடு வழங்குதல்.
4. உற்பத்தியாகும் தரமான பட்டுநூற்பு வெண்பட்டுக்கூடுகளுக்கு ஊக்கத் தொகை வழங்குதல்.
5. அரசு பட்டுநூற்பு நிலையங்களுக்கு சுழல்நிதி வழங்குதல்.

பட்டுவளர்ச்சித் துறை 2015–2016–ஆம் ஆண்டில் இளநிலை ஆய்வாளர், உதவி ஆய்வாளர் காலிப்பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நியமிக்க செயல்திறன் மிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு, 256 இளநிலை ஆய்வாளர்கள் மற்றும் 31 உதவி ஆய்வாளர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கியுள்ளது.

பயிர்க் காப்பீட்டு திட்டம் 20,000 பட்டு விவசாயிகள் பயன் பெறும் வகையில் மார்ச் 2017 வரை புதுப்பிக்கப்பட்டுள்ளது.

8 அரசு பட்டு நூற்பு அலகுகளுக்கு பட்டுக்கூடுகள் கொள்முதல் செய்ய தலா ரூ.5.00 இலட்சம் வீதம் சுழல் நிதியாக ரூ.40.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

## 12.2 பட்டுவளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதி

அரசு, 2015–2016–ஆம் ஆண்டில் பட்டுவளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதி திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீட்டினை உயர்த்தி ரூ.306.14 இலட்சம் ஒதுக்கீடு செய்து கீழ்க்கண்டவாறு ஒப்பளித்துள்ளது:

| வ.எண் | திட்ட விபரம் | இயல்பு | அலகு மதிப்பீடு | நிதி ஒதுக்கீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | பட்டுப்புழு பயிர்க் காப்பீடு | 20 இலட்சம் முட்டை தொகுதிகள் | ரூ.390/– 100முதொ | 70.200 |
| 2 | வெண்பட்டுக்கூடு உற்பத்திக்கு ஊக்கத்தொகை | 1000 மெட்ரிக் டன் | ரூ.10/– கிலோவிற்கு | 100.000 |
| 3 | அரசு பட்டு நூற்பகங்களுக்கு சுழல்நிதி வழங்குதல் | 8 | ரூ.5.00 இலட்சம் | 40.000 |
| 4 | இருசுழற்சி இன பட்டு நூல் உற்பத்திக்கு ஊக்கத்தொகை வழங்குதல் | 20 மெட்ரிக் டன் | ரூ.100/– கிலோவிற்கு | 20.000 |

| வ.எண் | திட்ட விபரம் | இயல்பு | அலகு மதிப்பீடு | நிதி ஒதுக்கீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 5 | "பட்டுமலர்" அச்சிட்டு வழங்குதல் | 14000 எண்ணிக்கை | ரூ.9.50 | 13.000 |
| 6 | காஞ்சிபுரம் அரசு அண்ணா பட்டு பரிமாற்றகத்தில் டிஜிட்டல் ஒளிபரப்பு முறை நிறுவுதல் | 1 | ரூ.5.00 இலட்சம் | 5.000 |
| 7 | அரசு குளிர்பதனம் மற்றும் வித்தகங்களில் உள்ள மின்ஆக்கிக்கு (ஜெனரேட்டர்) எரிபொருள் செலவினம் | 12 | ஒட்டு மொத்தம் | 5.000 |
| 8 | 2 அரசு வித்தகங்கள், சேலம் அரசு பட்டு பரிமாற்றகத்திற்கு மின்ஆக்கிகள் வழங்குதல் | 3 | ரூ.5.00 இலட்சம் | 15.000 |
| 9 | அரசு பட்டுக்கூடு அங்காடிகளுக்கு வருடாந்திர இணையதள வாடகை கட்டணம் | 16 | ஒட்டு மொத்தம் | 16.000 |
| 10 | அரசு வித்தகங்களுக்கு விதைக்கூடு பராமரித்தல், பட்டு முட்டை பாதுகாப்பிற்கு பிளாஸ்டிக் தட்டுக்கள், தாங்கிகள் வழங்குதல் | 3 | ஒட்டு மொத்தம் | 10.000 |
| 11 | அரசு பட்டு வித்தகம் ஆவலப்பள்ளி (இ) ஒசூர் குளிர்பதன நிலையம் வருடாந்திர பராமரிப்புக் கட்டணம் | 1 | ஒட்டு மொத்தம் | 6.100 |

| வ.எண் | திட்ட விபரம் | இயல்பு | அலகு மதிப்பீடு | நிதி ஒதுக்கீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 12 | கோவை அரசு பட்டு வித்தகம் குளிர்பதன நிலையம் வருடாந்திர பராமரிப்புக் கட்டணம் | 1 | ஒட்டு மொத்தம் | 1.710 |
| 13 | கிருஷ்ணகிரி அரசு பட்டு வித்தகம் குளிர்பதன நிலையம் வருடாந்திர பராமரிப்புக் கட்டணம் | 1 | ஒட்டு மொத்தம் | 3.580 |
| 14 | 5 அரசு பட்டுக்கூடு அங்காடிகளில் பொருத்தியுள்ள கண்காணிப்பு கேமரா கருவிகளுக்கு வருடாந்திர பராமரிப்புக் கட்டணம். | 5 | ஒட்டு மொத்தம் | 0.550 |
| | மொத்தம் | | | 306.140 |

## 12.3 மத்திய பகுதித் திட்டம்

கிரியா ஊக்கித் திட்டத்தினை மறுசீரமைப்பு செய்து மத்திய பகுதித் திட்டமாக செயல்படுத்திட மத்திய அரசின் ஜவுளித்துறை அமைச்சகம் எடுத்துள்ள முடிவினைத் தொடர்ந்து மத்திய பட்டு வாரியம் ஒரு சில திட்ட இனங்களுக்கு மட்டும் குறைக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. அதன்படி தமிழ்நாட்டிற்கு 2015–2016–ஆம் ஆண்டில் கீழ்க்கண்டவாறு ரூ.470.84 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

| வ.எண் | திட்ட விபரம் | இயல்பு குறியீடு | அலகு மதிப்பீடு | நிதி பங்களிப்பு (ரூபாய் இலட்சத்தில்) | | | மொத்தம் ரூ |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மத்திய பட்டு வாரியம் | மாநில அரசு | பயனா–ளியின் பங்கு | |
| 1 | பயனாளிகளுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்குதல் | 1500 | ரூ. 7000 | 105.00 | – | – | 105.00 |
| 2 | நோய் தடுப்பு முறைகள் | 3493 | ஒட்டு மொத்தம் | 139.74 | – | – | 139.74 |
| 3 | இளம்புழு வளர்ப்பு மையங்கள் பிரபலப் படுத்துதல் | 2 | ரூ.10.00 இலட்சம் | 16.00 | – | 4.00 | 20.00 |
| 4 | பட்டு பல்நோக்கு ஆலோசனை மையம் அமைக்க உதவுதல் | 2 | ரூ.1.40 இலட்சம் | 2.24 | – | 0.56 | 2.80 |
| 5 | அரசு வித்தகங்களை மேம்படுத்த சுழல்நிதி அளித்தல் | 1 | ஒட்டு மொத்தம் | 15.00 | – | – | 15.00 |
| 6 | அரசு வித்தகங்கனை நவீனப் படுத்துதல் | 2 | ரூ.10.40 இலட்சம் | 20.80 | – | – | 20.80 |
| 7 | பல்முனை பட்டு நூற்பகங்கள் அமைக்க உதவுதல் | 5 | ரூ.14.05 இலட்சம் | 55.71 | 10.538 | 7.025 | 73.273 |
| 8 | தானியங்கி பட்டு நூற்பாலை நிறுவ உதவுதல் | 1 | ரூ.135.00 இலட்சம் | 100.13 | – | 34.870 | 135.00 |
| 9 | பட்டு முறுக்கேற்றும் மையம் நிறுவ உதவுதல் | 3 | ரூ.5.406 இலட்சம் | 16.22 | – | – | 16.22 |
| | மொத்தம் | | | 470.84 | 10.538 | 46.455 | 527.83 |

## 12.4 பிற திட்டங்களுடன் ஒருங்கிணைத்தல்

பல்வேறு துறைகளின் திட்டங்களிருந்தும் பட்டு வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு பெற பட்டுவளர்ச்சித் துறை அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியின் கீழ் பட்டு வளர்ப்பு செயல்பாடுகளை மேம்படுத்திட மாநிலத்தின் 68 பின்தங்கிய ஒன்றியங்களில் ரூ.12.37 கோடி மதிப்பிலான 68 திட்டங்களை செயல்படுத்திட கீழ்க்கண்டவாறு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது:

| வருடம் | ஊராட்சி ஒன்றியங்கள் | மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி | பயனாளியின் பங்கு | திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 2014–2015 | 10 | 99.27 | 37.80 | 137.07 |
| 2015–2016 | 58 | 717.43 | 382.73 | 1100.16 |
| மொத்தம் | 68 | 816.70 | 420.53 | 1237.23 |

இந்த திட்டங்களில் மல்பரி சாகுபடி செய்வதற்கும், சொட்டுநீர்ப் பாசனம் நிறுவுவதற்கும், பட்டுப்புழு வளர்ப்பு மனைகள் கட்டுவதற்கும், பட்டுப்புழு வளர்ப்பு உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்கும், விவசாயிகளுக்கு பயிற்சி அளிப்பதற்கும் மானிய உதவி வழங்கப்படுகிறது.

2015–2016–ஆம் ஆண்டில் 2000 விவசாயிகளுக்கு பட்டுப்புழு வளர்ப்பிலும், 500 பட்டு நூற்பு தொழிலாளர்கள் /

தொழில் முனைவோர்களுக்கு பட்டு நூற்பிலும் பயிற்சி வழங்கிட மத்திய அரசு ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அதன் பங்காக ரூ.147.75 இலட்சம் நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளது. மாநில அரசு இத்திட்டத்தினை செயல்படுத்திட தன் பங்காக ரூ.49.25 இலட்சம் நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளது.

## 13. புதுமைத் திட்டங்கள்

### 13.1 பட்டு சுற்றுலா



**சேலம் மாவட்டம் ஏற்காடு அரசு பட்டுப் பண்ணையில் உருவாகிவரும் பட்டு சுற்றுலா வளாகம்**



அறிவியல் கண்காட்சிக் கூடம் கட்டுமானப் பணிகள்



உணவுக் கூட கட்டுமானப் பணிகள்



சிறுவர் உற்சாக வரைகலை மைய கட்டுமானப் பணிகள்



விற்பனை வளாக கட்டுமானப் பணிகள்

புதுமையான வழியில், பட்டுவளர்ச்சி குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த, பட்டுவளர்ச்சித் துறை அளித்த செயற்குறிப்பினை மாநில திட்டக்குழு ஏற்றுக்கொண்டு, **2015–2016–**ஆம் ஆண்டில் மாநில புதுமை நிதியின் கீழ் பட்டு சுற்றுலா எனும் திட்டத்தை செயல்படுத்த ஒப்புதல் அளித்துள்ளது. ஏற்காடு அரசு பட்டுப்பண்ணையில் சுற்றுலா மையம் அமைக்க அரசு ரூ.250 இலட்சம் நிதி உதவி அளித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள திட்ட இனங்கள் பின் வருமாறு:

| **வ.எண்.** | **திட்ட விபரம்** | **நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்)** |
|---|---|---|
| **1** | **நிலம் சமப்படுத்துதல், மாதிரி மல்பரி தோட்டம் அமைத்தல் முதலியன** | **60.00** |
| **2** | **புதிய கண்காட்சி வளாகம் கட்டுதல், உணவகங்கள், அடிப்படை வசதிகள், விற்பனை வளாகங்கள் கட்டுதல் முதலியன** | **90.00** |
| **3** | **சிறுவர் பூங்கா அமைத்தல், நடைபாதைகள், நவீன அறிவியல் கண்காட்சிக் கூடங்கள், சிறுவர்களுக்கான உற்சாக வரைகலை மையம் நிறுவுதல்** | **50.00** |
| **4** | **மாதிரி பட்டு நூற்பு அலகு, பட்டு முறுக்கேற்றும் அலகு, சாயமேற்றுதல் அலகு மற்றும் பட்டு நெசவு அலகு நிறுவுதல்** | **50.00** |
| | **மொத்தம்** | **250.00** |

## 13.2 வெண்பட்டுக்கூடு உற்பத்திக்கு ஊக்கத் தொகை வழங்குதல்

தரமான வெண்பட்டுக்கூடு உற்பத்தி செய்யவும், வெண்பட்டுக்கூடு உற்பத்தித்திறனை அதிகப்படுத்திடவும், விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக, 100 முட்டை தொகுதிகளுக்கு 80 கிலோ மற்றும் அதற்குமேல் உற்பத்தி செய்யும் பட்டு விவசாயிகளுக்கு ஒரு கிலோவிற்கு ரூ.10 வீதம் ஊக்கத் தொகை 2015–2016–ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகிறது. இத்திட்டம் 2016–2017–ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 14. புதுமையான தொழில்நுட்பத்திற்கான விருது வழங்குதல்

மத்திய பட்டு வாரியம் நவம்பர் 2015–இல் மைசூரில் இரண்டு நாட்கள் நடைபெற்ற ‘‘புதுமையான தொழில் நுட்பங்கள் மற்றும் பட்டு வளர்ப்பில் சிறந்த செயல்பாட்டிற்கான விருது’’ வழங்கும் கருத்தரங்கில் தமிழ்நாட்டைச் சார்ந்த இரு விவசாயிகள், திருமதி எஸ்.சிவசெல்வி, க/பெ.சி.செந்தில்குமார், மலையாண்டி கவுண்டனூர், திருப்பூர் மாவட்டம் மற்றும் திரு பி.சித்தராஜ், த/பெ.புட்டுசாமி, எர்ணஹள்ளி, தாளவாடி முறையே குறிப்பிட்ட மல்பரி பரப்பில் அதிக வருவாய் ஈட்டியதற்காகவும், சிறந்த புதிய தொழில்நுட்பத்தினைப் பின்பற்றி உற்பத்தித்திறனை அதிகரித்ததற்காகவும் விருது பெற்றனர்.



**நவம்பர் 18, 2015 அன்று மைசூரில் நடைபெற்ற பட்டுவளர்ப்பில் சிறந்த செயல்பாட்டிற்கான விருது பெறும் தமிழ்நாட்டு விவசாயி**

## 15. 2016–2017–ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்


2016–2017–ஆம் ஆண்டு துறை செயல்படுத்த உத்தேசித்துள்ள கீழ்க்காணும் திட்டங்கள் மத்திய பட்டு வாரியத்தின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

| வ.எண் | திட்டத்தின் வகைகள் | அலகு மதிப்பு ரூபாய் | நிதி பங்களிப்பு (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|
| | | | மத்திய பட்டு வாரியம் | பயனாளி பங்கு | மொத்தம் |
| 1 | தானியங்கி பட்டு நூற்பாலை நிறுவுதல் (400 முனைகள்) (75%:25%) | 13500000 | 101.250 | 33.750 | 135.000 |
| 2 | சான்று பெற்ற பல்முனை பட்டு நூற்பு இயந்திரங்கள் நிறுவிட நிதி உதவியளித்தல் (75%:25%) | 1485600 | 111.420 | 37.140 | 148.560 |
| 3 | பட்டு முறுக்கேற்றும் அலகு அமைத்திட உதவியளித்தல் (75%:25%) | 786000 | 29.475 | 9.825 | 39.300 |
| 4 | அரசு பட்டு வித்தகத்திற்கு உபகரணங்கள் கொள்முதல் செய்தல் (100%) | 1300000 | 26.000 | – | 26.000 |
| 5 | பெரிய அளவிலான இளம்புழு வளர்ப்பு மையம் நிறுவிட உதவியளித்தல் (80%:20%) | 1000000 | 56.000 | 14.000 | 70.000 |
| 6 | பட்டு பல்நோக்கு ஆலோசனை மையம் நிறுவிட உதவியளித்தல் (80%:20%) | 140000 | 2.240 | 0.560 | 2.800 |
| 7 | தரமான கிருமிநாசினிகள் வழங்குதல் (100%) | 5000 | 150.000 | – | 150.000 |
| 8 | பயனாளிகளுக்கு திறன் பயிற்சி வழங்குதல் (100%) | 7000 | 105.000 | – | 105.000 |
| | மொத்தம் | | 581.385 | 95.275 | 676.660 |


## 16. பட்டுவளர்ச்சித் துறையின் சாதனைகள்

தமிழ்நாடு, தேசிய அளவில் கீழ்க்கண்ட இனங்களில் கடந்த ஆண்டை விட சாதனையில் உயர்ந்து, தொடர்ந்து முதன்மை நிலையில் உள்ளது.


- 2015–2016–ஆம் ஆண்டில் 100 முட்டைத் தொகுதிகளுக்கான சராசரி பட்டுக்கூடு உற்பத்தித் திறன் 73.90 கிலோ கிராமை விட **அதிகரித்து 76.90 கிலோ கிராமாக** உள்ளது.
- 2015–2016–ஆம் ஆண்டு **மொத்த பட்டு உற்பத்தியில் 80.71 விழுக்காடு** வெண்பட்டு உற்பத்தியாகும். 2015–2016–ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் 1532 மெட்ரிக் டன் வெண்பட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இது கடந்த 2014–2015–ஆம் ஆண்டின் வெண்பட்டு உற்பத்தி சதவீதமான 75.34 சதவீதத்தை விட கூடுதலாகும்.
- வெண்பட்டுக்கூடு உற்பத்தியினை அதிகப்படுத்திட தொகுப்பு அபிவிருத்தித் திட்டம் 28 கிராமங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டில் 100 முட்டைத் தொகுதிகளுக்கு 75.54 கிலோ கிராமாக இருந்த பட்டுக்கூடு உற்பத்தித் திறன் 2015–2016–ஆம் ஆண்டில் **78 கிலோ கிராமாக உயர்ந்துள்ளது.**





**2015–2016–ஆம் ஆண்டில் 100 முட்டைத் தொகுதிகளுக்கு சராசரி பட்டுக்கூடு அறுவடை**




**தமிழ்நாட்டில் கடந்த 5 ஆண்டுகளில் 100 முட்டைத் தொகுதிகளுக்கு சராசரி பட்டுக்கூடு அறுவடை**




**2015–2016–ஆம் நிதியாண்டில் முக்கிய மாநிலங்களின் வெண்பட்டு உற்பத்தி (மெட்ரிக் டன்னில்)**




**2015–2016–ஆம் ஆண்டில் தொகுப்புத்திட்ட பகுதிகளில் பாரம்பரியமாக பட்டு உற்பத்தி செய்யும் மாநிலங்களில் 100 முட்டைத் தொகுதிகளுக்கு சராசரி பட்டுக்கூடு அறுவடை**

பட்டு விவசாயிகளின் வருமானத்தை மேலும் அதிகரிக்க 28 தொகுப்புகளில் 100 முட்டைத் தொகுதிகளுக்கான சராசரி பட்டுக்கூடு உற்பத்தித் திறனை 2016–2017–ஆம் ஆண்டில் 82 கிலோ கிராமாகவும், பிற பகுதிகளில் 78 கிலோ கிராமாகவும் உயர்த்திட துறை தொடர்ந்து தீவிர முயற்சி மேற்கொண்டு வருகிறது.

## 17. தமிழகத்தில் பட்டுத்தொழில் மேலும் விருத்தியடைய மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்

### 17.1 பட்டுக்கூடு அறுவடைக்கு முந்தைய நிலை

(அ) தொழில் நுட்ப சேவை மையங்கள் மூலம் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தி, புதிய விவசாயிகளை ஊக்கப்படுத்தி பட்டுத் தொழிலில் ஈடுபடச் செய்தல்.

(ஆ) தரமான, உயர் விளைச்சல் தரும் மல்பரி இரகங்களை விவசாயிகளுக்கு விநியோகம் செய்வதை உறுதி செய்தல்.

(இ) விவசாயிகளுக்கு தரமான, நோயற்ற பட்டு முட்டைகள் விநியோகிப்பதை உறுதி செய்தல்.

(ஈ) மல்பரி சாகுபடி மற்றும் பட்டுப்புழு வளர்ப்பில் பயிற்சி அளித்தல்.

(உ) ஆதார விதைப் பண்ணைகள், வித்தகங்கள், இளம்புழு வளர்ப்பு மையங்கள், பட்டுக்கூடு அங்காடிகள் போன்ற அரசு அலகுகளின் உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துதல்.

(ஊ) பட்டுத் தொழிலில் ஈடுபடும் விவசாயிகளுக்கு முக்கியமாக மல்பரி நடவு செய்வதற்கும், சொட்டுநீர்ப் பாசனம் அமைப்பதற்கும் நிதி உதவியளித்தல்.

## 17.2 பட்டுக்கூடு நிலை

(அ) பட்டு விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் பட்டுக்கூடுகளை விற்பனை செய்ய அங்காடி வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

(ஆ) பட்டு விவசாயிகளுக்கு பயிர்க் காப்பீடு திட்டத்தை செயல்படுத்துதல்.

(இ) வெண்பட்டுக் கூடு உற்பத்திக்கு ஊக்கத் தொகை வழங்குதல்.

(ஈ) பட்டுப்புழுவளர்ப்புக் குடில் அமைப்பதற்கும், புழுவளர்ப்பு தளவாடங்கள் விநியோகம் செய்வதற்கும், பட்டு விவசாயிகளுக்கு நிதி உதவியளித்தல்.

## 17.3 பட்டுக்கூடு அறுவடைக்கு பிந்தைய நிலை

தமிழகத்தில் பட்டுக்கூடு அறுவடைக்கு பிந்தைய நிலையினை வலுப்படுத்தும் வகையில், பின்வரும் பல்வேறு தரப்பட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(அ) புதிய பட்டு நூற்பகங்கள் மற்றும் புதிய பட்டு முறுக்கேற்றும் நிலையங்கள் அமைக்க தனியார் நிறுவனங்களுக்கு நிதி உதவி அளித்தல்.

(ஆ) வெண்பட்டு உற்பத்தி செய்யும் தானியங்கி மற்றும் பலமுனை நூற்பாளர்களுக்கு ஊக்கத் தொகையை அதிகரித்து வழங்குதல்.

(இ) பட்டு நூற்புத் தொழில் முனைவோர் மற்றும் தொழிலாளர்களுக்கு உற்பத்தியினையும் தரத்தினையும் உயர்த்திட பயிற்சி அளித்தல்.

(ஈ) பழமையான காட்டேஜ் பேசின் இயந்திரங்களுக்குப் பதிலாக மேம்படுத்தப்பட்ட பலமுனை பட்டுநூற்பு மற்றும் தானியங்கி நூற்பு இயந்திரங்களைக் கொண்டு தரம் உயர்த்தல்.

## 18. 2016–2017–ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு

பட்டுவளர்ச்சித் துறைக்கென 2016–2017–ஆம் ஆண்டிற்கான வரவு, செலவு திட்டத்தில், திட்டம் மற்றும் திட்டம் சாராப் பணிகளை செயல்படுத்த கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | திட்டத்தின் பெயர் | | 2016–2017 ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | திட்டப் பணிகள் | | |
| அ | 1. பட்டுவளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதியின் கீழ் வளர்ச்சித் திட்டங்கள் | 100.00 | |
| | 2. பட்டுவளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதி (கணக்குகள் இடையே மாற்றம்) | 170.00 | |
| | | 270.00 | 270.00 |
| ஆ | புதிய திட்டங்கள் | | 1106.04 |
| இ | மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம் | | 0.01 |
| ஈ | மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் | | 0.01 |
| | திட்டப் பணிகள் மொத்தம் | | 1376.06 |
| 2 | திட்டம் சாராப் பணிகள் (அரசு அலகுகளைப் பராமரித்தல், ஊதியம் மற்றும் கூலித்தொகைகள் முதலியன) | | 6244.91 |
| மொத்தம் (திட்டப் பணிகள் + திட்டம் சாராப் பணிகள்) | | | 7620.97 |

Poompuhar

Hand in hand with our artisans...

## தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்

"பூம்புகார்" என்று பிரபலமாக அழைக்கப்படும் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், நிறுவனங்கள் சட்டம், **1956**–இன் கீழ் அரசுக்கு சொந்தமான பொதுத் துறை நிறுவனமாக உருவாக்கப்பட்டது. இந்நிறுவனம், **01.08.1973** முதல் செயல்படத் துவங்கியது. தொழில் வணிகத் துறை மற்றும் தமிழ்நாடு மாநில கூட்டுறவு வர்த்தக சங்கங்களின் கீழ் இயங்கி வந்த கைத்திறப் பொருட்கள் விற்பனை நிலையங்களும், கிடங்குகளும், பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையங்களும் இந்நிறுவனம் நிறுவப்பட்டவுடன் மாற்றப்பட்டன.

கைவினைஞர்களின் திறமையை மேம்படுத்த உரிய பயிற்சி அளித்தல், கைவினைஞர்களின் உற்பத்தித்திறனையும் அவர்கள் தயாரிக்கும் கைவினைப் பொருட்களின் தரத்தையும் மேம்படுத்துதல், கைவினைப் பொருட்கள் உற்பத்தியில் நேரிடும் பணிப்பளுவைக் குறைத்தல், தொழில் சார்ந்த இன்னல்களைக் களைதல் மற்றும் வடிவமைப்புகளில் புதுமையைப் புகுத்துதல் போன்றவை இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கங்கள் ஆகும்.

இக்கழகத்தின் மூலம் கைவினைஞர்கள் சமூக பொருளாதார பாதுகாப்பு பெறுவதுடன் அவர்களது பொருட்களை சந்தைபடுத்தும் பயனையும் அடைகின்றனர். மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் கைவினைப் பொருட்களின் விவரங்களை ஆவணமாக்குவதுடன் பதிவு செய்யவும் இந்நிறுவனம் மேலும் உதவுகிறது.

## 2. தமிழ்நாட்டில் பூம்புகாரின் கிளைகள்



### 3. விற்பனை நிலையங்கள்

இந்நிறுவனம் சென்னை, புதுதில்லி, கொல்கத்தா, கோயம்புத்தூர், ஈரோடு, சேலம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, கன்னியாகுமரி, சுவாமிமலை மற்றும் மாமல்லபுரம் போன்ற இடங்களில் அமைந்துள்ள தனது 12 விற்பனை நிலையங்கள் மூலம் கைவினைப் பொருட்களை விற்பனை செய்து கைவினைஞர்களுக்கு சந்தை வாய்ப்பை ஏற்படுத்தித் தருகிறது.



**பூம்புகார் விற்பனை நிலையம், சென்னை**

## 4. கண்காட்சிகள்

இந்நிறுவனம் 2015–2016–ஆம் ஆண்டில் பல்வேறு முக்கிய நகரங்களில் 250–க்கும் மேற்பட்ட கண்காட்சிகளை நடத்தியுள்ளது, அவற்றில் சென்னை, அகமதாபாத், பரோடா, பெங்களூர் மற்றும் கோயம்புத்தூரில் நடைபெற்ற 5 கிராப்ட் பஜார்களும் அடங்கும். மேலும் இந்நிறுவனம் 2016–2017–ஆம் ஆண்டில் 260 கண்காட்சிகளை நடத்த திட்டமிட்டுள்ளது. இவற்றில் சென்னை, கோயம்புத்தூர் மற்றும் கன்னியாகுமரியில் 3 காந்தி சில்ப் பஜார்களும், நாடெங்கும் நடைபெறவுள்ள 15 கிராப்ட் பஜார்களும் மற்றும் 15 கண்காட்சிகளும் அடங்கும்.



**பூம்புகார் கண்காட்சி – மும்பை**

**5. உற்பத்தி நிலையங்கள்**

இந்தியாவிலுள்ள அனைத்து மாநில அரசு கைவினைப் பொருட்கள் வளர்ச்சிக் கழகங்களில் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் மட்டுமே முக்கிய கைவினைப் பொருட்களுக்கு சொந்த உற்பத்தி நிலையங்களைக் கொண்டுள்ளது. நாச்சியார்கோயில் (பாரம்பரிய பித்தளை விளக்குகள்), மதுரை (பித்தளை விளக்குகள் மற்றும் பித்தளை கலைப் பொருட்கள்), வாகைகுளம் (பித்தளை மலபார் விளக்குகள் மற்றும் பிற விளக்குகள்), சுவாமிமலை (பஞ்சலோக சிற்பங்கள்), தஞ்சாவூர் (தஞ்சாவூர் கலைத் தட்டுகள்), கள்ளக்குறிச்சி (சந்தன மரச்சிற்பங்கள்) மற்றும் மாமல்லபுரம் (கற்சிற்பங்கள்) ஆகிய 7 இடங்களில் உற்பத்தி நிலையங்கள் உள்ளன.

கடந்த ஆண்டில் இந்நிறுவனத்தின் உற்பத்தி மதிப்பு ரூ.379.94 இலட்சம் ஆகும். 2016–2017–ஆம் ஆண்டிற்கு ரூ.665.00 இலட்சம் உற்பத்தி மதிப்பின் இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது இந்நிறுவனத்தின் லாபத்தை அதிகரிப்பதுடன் கைவினைஞர்களின் வருவாயை அதிகரிக்கவும் உதவி புரியும்.

கடந்த ஐந்து ஆண்டுகளின் உற்பத்தி விவரங்கள் பின்வருமாறு:

| வருடம் | உற்பத்தி (ரூ. இலட்சத்தில்) |
|---|---|
| 2011–2012 | 458.48 |
| 2012–2013 | 462.63 |
| 2013–2014 | 500.10 |
| 2014–2015 | 540.87 |
| 2015–2016 | 379.94 |




**கற்சிற்பம் செதுக்குதல்**

## 6. விற்பனை அளவு

இந்நிறுவனம் துவக்கப்பட்டதிலிருந்து தன்னுடைய வருடாந்திர விற்பனையில் மாபெரும் வளர்ச்சியை அடைந்து வருகிறது. **2015–2016–ஆம் ஆண்டில் விற்பனை மதிப்பு ரூ.34.68 கோடியை எட்டியுள்ளது. இக்கழகம் துவக்கப்பட்ட நாளிலிருந்து இதுவே அதிகபட்ச விற்பனையாகும்.**

### 6.1 கடந்த ஐந்து ஆண்டுகளில் விற்பனை


கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்நிறுவனத்தின் விற்பனை விவரங்கள் பின்வருமாறு :





**பஞ்சலோக ராதாகிருஷ்ணா**

## 6.2 2015–2016–ஆம் ஆண்டின் கைத்திறப் பொருட்களின் வகைவாரியான விற்பனை




## 7. தொழில்நுட்ப அடிப்படையிலான முயற்சிகள்

இந்நிறுவனம் உலகளாவிய சந்தை வாய்ப்புகளை எட்டும் வகையில் மின் வணிகம் (e.commerce) சமூக ஊடகங்களான முகநூல், டுவிட்டர், யூடியுப், லிங்க்டின், பின்டிரஸ்ட், கூகுள் பிளஸ், இன்ஸ்டாகிராம், ப்ளாக் (Blog) மற்றும் ஸ்லைடு ஷோ மூலம் மேற்கொண்ட முயற்சிகள் நல்ல பலனை அளித்து வருகின்றன. மேற்கண்ட சமூக ஊடகங்களின் மூலம் பெரும் எண்ணிக்கையிலான மின் வணிக ஆர்வலர்கள்

மதிப்பளித்துள்ளார்கள் என்பதற்கு கீழ்க்காணும் பட்டியலே சான்றாகும்:

| சமூக ஊடகங்கள் | பார்வையிட்டோர் எண்ணிக்கை |
|---|---|
| முகநூல் | 10542 |
| டுவிட்டர் | 59900 |
| பின்டிரஸ்ட் | 32056 |
| இன்ஸ்டாகிராம் | 710473 |
| ப்ளாக் (Blog) | 38234 |
| கூகுள் | 57089 |

மொத்த பார்வையாளர்களின் எண்ணிக்கை **908294.** இவ்வகையான விரிவுபடுத்தப்பட்ட சந்தை யுக்திகள் **2016–2017**–ஆம் ஆண்டிற்கு உயர்ந்தபட்ச விற்பனை இலக்கை நிர்ணயிக்க இந்நிறுவனத்திற்கு ஊக்கம் அளித்துள்ளது.

**8. நிதி நிலை செயல்பாடு**

**2015–2016**–ஆம் ஆண்டில் இந்நிறுவனம் ரூ.**78.37** இலட்சம் (துணிக்கைக்கு முன்) நிகர இலாபமாக ஈட்டியுள்ளது. கடந்த **12** ஆண்டுகளாக தொடர்ந்து இந்நிறுவனம் இலாபத்தில் இயங்கி வருகிறது.

## 9. சிறப்பு முயற்சிகள்

1) இந்நிறுவனம் தலைமை அலுவலகம் உட்பட 12 விற்பனை நிலையங்கள் மற்றும் 7 உற்பத்தி நிலையங்களை காகிதமற்ற நிறுவனமாக உருவாக்கி, வலைத்தளம் மூலம் ஒருங்கிணைத்து "எந்த இடத்திலும், எந்த நேரத்திலும்" என்ற முறையில் செயல்பட்டு வருகிறது. இதன்மூலம் கோப்புக்கள் விரைவான வேகத்தில் அனுப்பும் வசதி இருப்பதால் நிறுவனத்தின் ஒட்டுமொத்த திறன் மேம்பாடடைகிறது. இந்த முயற்சி 2014–2015–ஆம் ஆண்டில் மேற்கொண்ட பல்வேறு தொழில்நுட்ப ஊடுதலின் மற்றொரு அங்கமாக கூடுதலாக இடம் பெற்றுள்ளது.

2) இந்நிறுவனத்தின் அனைத்து 12 விற்பனை நிலையங்கள் மற்றும் 7 உற்பத்தி நிலையங்கள் ஒன்றிணைக்கப்பட்ட கண்காணிப்புக் கேமிராக்கள் மூலம் கண்காணிக்கப் படுகின்றன.

3) இந்நிறுவனத்திற்கு வருவாயை ஈட்டும் வகையில் எடுக்கப்பட்ட புதிய முயற்சிகள் பயனளித்துள்ளன. சென்னை பன்னாட்டு விமான நிலையத்தின் மூன்று மற்றும் நான்காவது முனையங்களில் உள் அலங்காரம் மற்றும் அழகுபடுத்துவதற்காக ரூ.3.05 கோடி மற்றும்

ரூ.2.47 கோடியை சென்னை விமான நிலையம் முறையே 1 மற்றும் 2–ஆம் கட்டமாக வழங்கியது. எண்ணூர் துறைமுகப் பொறுப்புக் கழகம் தன்னுடைய வெளிப்பகுதியை அழகுபடுத்துவதற்காக ரூ.1.10 கோடி வழங்கியுள்ளது. இதைப்போன்றே திருப்பதி, திருச்சி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் விமான நிலையங்கள், தென்னக ரயில்வேயின் 7 ரயில் நிலையங்கள் மற்றும் கலைவாணர் அரங்கம் புதுப்பித்தல் போன்ற பணி ஆணைகளைப் பெற பேச்சுவார்த்தை நடைபெற்று இறுதி கட்டத்தை எட்டியுள்ளது. இதன்மூலம் நிறுவனத்தின் விற்பனை அதிகரிப்பதுடன் அகில இந்திய அளவில் கைத்திற உள் அலங்கார சந்தையில் பூம்புகாருக்கென்று தனித்துவம் பெற ஏதுவாகும்.

4) மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளுக்கு காகிதக்கூழ் பொம்மை தயாரிக்கும் பயிற்சி அளிக்கும் பயிற்றுநர்களுக்கு பயிற்றுவிக்க அரசு ரூ.16.00 இலட்சம் வழங்கியுள்ளது.

5) மாமல்லபுரம் விற்பனை நிலையத்தில் கைத்திறனுடன் கூடிய சிற்றுண்டி நிலையம் அமைக்க ரூ.25.00 இலட்சம் அரசு வழங்கியுள்ளது. இதேபோன்று, கைத்திறனுடன் கூடிய சிற்றுண்டி நிலையம் சென்னை

விற்பனை நிலையத்திலும் அமைக்கப்பட்டுள்ளது. கைத்திறப் பொருட்கள் விற்பனையில் இந்த யுக்தி பெருமளவிலான வாடிக்கையாளர்களை ஈர்க்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

6) இந்திய அரசு, நலிவடைந்து வரும் ஐந்து கைத்திறத் தொழில்களில் பயிற்சி அளிக்க ரூ.17.50 இலட்சத்தையும், சுவாமிமலையில் புதிய பொருள் வடிவமைப்பு பயிற்சிக்காக ரூ.8.50 இலட்சத்தையும் வழங்கியுள்ளது.

7) அரசு துறை மற்றும் அரசு முகமைகள் தங்களுக்குத் தேவைப்படும் கைவினைப் பொருட்களை கொள்முதல் செய்வதற்கு பூம்புகார் நிறுவனத்தை, தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 பிரிவு 16 (f)ன் கீழ் ஒரு "விருப்ப கொள்முதல் முகமை" (Optional Procurement Agency) என அரசு அறிவித்துள்ளது. இதன்மூலம், வரும் ஆண்டுகளில் இந்நிறுவனத்திற்கு பெருமளவு விற்பனை ஆணைகள் கிடைக்க வசதி செய்யப்பட்டுள்ளது.





**சென்னை விமான நிலையத்தின் அழகுபடுத்தப்பட்ட பன்னாட்டு முனையம்**

**10. தொழில்நுட்பங்களை பயன்படுத்தி பூம்புகாரை மேம்படுத்துதல்**

1) www.poompuhar.org என்ற மின் வணிக தளம் 15.11.2014 முதல் இயங்கி ரூ.9.56 இலட்சம் மதிப்பிலான ஆணைகளைப் பெற்றுள்ளது.

2) அனைத்து விற்பனை நிலையங்களிலுள்ள அனைத்து பொருட்களுக்கும் மின்னனு விலைச்சீட்டு (Bar coding) உருவாக்குதல் உள்பட கணினி மயமாக்கல் மற்றும் மென்பொருள் மேம்பாடு ஆகிய அனைத்துப் பணிகளும் நிறைவடைந்துள்ளன.

3) அனைத்து அலுவலக கணக்குகளையும், தலைமை அலுவலகத்துடன் ஒருங்கிணைக்கும் டாலி (Tally) மென்பொருள் நிறுவப்பட்டுள்ளது.

4) அனைத்து விற்பனை மற்றும் உற்பத்தி நிலையங்களுக்கும் கணினி மற்றும் இணையதள வசதி செய்யப்பட்டுள்ளது.

5) திருத்தியமைக்கப்பட்ட விற்பனை நிலைய நடவடிக்கைகள் மற்றும் விலைச்சீட்டிற்கான (Billing software) மென்பொருள் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. அனைத்து விற்பனை நிலையங்களுக்கும் உற்பத்தி

நிலையங்களுக்கும் வைபை (Wi-fi) இணைப்பு வசதி செய்யப்பட்டுள்ளது.

6) முப்பரிமாண வடிவமைப்பு, ஸ்கேனிங் மற்றும் அச்சு தொழில்நுட்பம் போன்றவை உற்பத்தி முறைகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இது அனைத்து உற்பத்தி நிலையங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

## 11. ஏற்றுமதி

இந்நிறுவனம், சிங்கப்பூர், மலேசியா, இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு பாரம்பரியமிக்க கைவினைப் பொருட்களை ஏற்றுமதி செய்து வருகிறது. பஞ்சலோகச் சிலைகள், பித்தளை அலங்கார விளக்குகள், நூக்கமர அறைகலன்கள் மற்றும் தஞ்சாவூர் ஓவியங்கள் ஆகியவை இந்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் முக்கிய கைவினைப்பொருட்களாகும்.



ஏற்றுமதிக்கான பூஜை அறை கதவு

## 12. சிறப்புத் திட்டங்கள்

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் தமிழக அரசின் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறைக்கு, 2015–2016–ஆம் ஆண்டில், ரூ.45.14 இலட்சம் மதிப்பிலான பித்தளை சலவைப் பெட்டிகளை விநியோகம் செய்யும் பணியினை செவ்வனே நிறைவேற்றியுள்ளது.



**பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறைக்கு வழங்கப்பட்ட பித்தளை சலவைப் பெட்டி**

## 13. மனித வள மேம்பாட்டினை வலுப்படுத்துதல்

இந்நிறுவனம் கடந்த 5 ஆண்டுகளில் காலிப்பணியிடங்களைப் பூர்த்தி செய்யும் வகையில் 59 பணியாளர்களை வெவ்வேறு பணி நிலைகளில் பணியமர்த்தியுள்ளது.

## 14. கைவினைஞர்களுக்கான நலன்

### 14.1 விருதுகள்

இந்நிறுவனம் கைவினைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் கீழ்க்கண்ட விருதுகளை ஆண்டுதோறும் வழங்கி வருகிறது:

| வ.எண் | விருதின் பெயர் | விருதுகளின் விபரம் | விருதுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | வாழும் கைவினைப் பொக்கிஷம் | ரூ.1.00 லட்சம் ரொக்கம், 8 கிராம் தங்கப்பதக்கம், தாமிரப்பத்திரம் மற்றும் சான்றிதழ் | 10 |
| 2 | பூம்புகார் மாநில விருது | ரூ.50,000/– ரொக்கம், 4 கிராம் தங்கப்பதக்கம், தாமிரப்பத்திரம் மற்றும் சான்றிதழ் | 10 |
| 3 | பூம்புகார் மாவட்ட கைத்திறன் விருது | ரூ.5000/– ரொக்கம், வெள்ளிப்பதக்கம் மற்றும் சான்றிதழ் | 85 |
| 4 | கைவினைப் பொருள் ஏற்றுமதி விருது | ரூ.40,000/– ரொக்கம், 4 கிராம் தங்கப்பதக்கம், தாமிரப்பத்திரம் மற்றும் சான்றிதழ் | 2 |
| 5 | குழு உற்பத்தி விருது | ரூ.40,000/– ரொக்கம், 4 கிராம் தங்கப்பதக்கம், தாமிரப்பத்திரம் மற்றும் சான்றிதழ் | 3 குழுக்கள் |
| 6 | பயன்பாடு சார்ந்த கைவினைப் பொருட்கள் விருது | ரூ.40,000/– ரொக்கம், 4 கிராம் தங்கப்பதக்கம், தாமிரப்பத்திரம் மற்றும் சான்றிதழ் | 3 |
| 7 | அடுத்த தலைமுறை கைவினைஞர்–களுக்கான கைத்திறப் போட்டி | ரூ.2000/– ரொக்கம், வெள்ளிப்பதக்கம் மற்றும் சான்றிதழ் | 150 |
| | மொத்தம் | | 263 |

நாட்டிலேயே கைவினைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான விருதுகளை வழங்கும் தனித்துவம் மிக்கதாக இம்மாநிலம் திகழ்கிறது.




**2015–2016–ஆம் ஆண்டிற்கான பூம்புகார் விருதுகள் வழங்கும் விழா**

## 14.2 கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்துதல்

- இந்நிறுவனம் தன்னுடைய உற்பத்தி நிலையங்கள் மூலமாக கைவினைஞர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பினை அளிக்கிறது.

- மேலும், இந்நிறுவனத்தின் சிறப்பு திட்டங்கள் வாயிலாக எண்ணற்ற கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்கி வருகிறது.

## 15. புதுமைத் திட்டங்கள்

### 15.1 வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்

முப்பரிமாண முறையில் வடிவமைப்பு மற்றும் அச்சுத்தொழில் பயன்பாடு பற்றிய ஆராய்ச்சிக்காக அரசு, தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டத்தின்கீழ் வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிலையம் அமைக்க ரூ.1.68 கோடி நிதி வழங்கியுள்ளது. இதன் மூலம் இந்நிறுவனத்தின் புதிய வடிவமைப்புகளை சந்தைக்கு கொண்டு வரும் திறனை அதிகரிக்கும்.

இந்த வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிலையம், வடிவமைப்பாளர்கள், கைவினைஞர்கள், வணிக நிறுவனங்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் ஆர்வலர்கள் ஆகியோரின் விவரத் தரவுகளை பராமரித்து இவர்களிடையே தகவல் தொடர்பு வசதியை எளிதாக்கும். மேலும் இந்நிலையம் பல்வேறு பங்களிப்பாளர்களை புதிய உற்பத்தி முயற்சிக்கு கொண்டு வருவதுடன் வெளிநாடு மற்றும் உள்நாட்டிலுள்ள வடிவமைப்பு நிலையங்கள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றுடன் இணைந்து வடிவமைப்பு தொடர்பான ஆராய்ச்சிகளை மேம்படுத்தும்.

## 15.2 கைவினைஞர்கள் மற்றும் கைவினைஞர்களின் திறமைக்கான மின் தொகுப்பு

கைவினைஞர்களுக்கான மின் தொகுப்பு ஏற்படுத்த தமிழக அரசு ரூ.1.00 கோடி நிதி வழங்கியுள்ளது. இதன்மூலம் ஒவ்வொரு கைவினைஞர்களுக்கும் தனித் தனியான இணையதள பக்கங்கள் (webpage) உருவாக்கப்பட்டு அவற்றில் கைவினைஞர்கள் மற்றும் அவர்களது படைப்புகளின் விவரங்கள் அடங்கி இருக்கும். இதன் பல்வேறு பயன்கள் கீழ்வருமாறு:

1) இந்நிறுவனம் மற்றும் நிறுவனம் அளித்து வரும் வசதிகளுக்கான நேரடி அணுகுமுறை
2) வாங்குபவருடன் நேரடி அணுகுமுறை – நிறுவனத்தின் மின் வணிகம் மூலம் சிறப்பான சந்தை வாய்ப்பு
3) சிறப்பான ஆலோசனை மற்றும் காணொளிக்கான அணுகுமுறை
4) இடைத்தரகர்களின்றி உலக சந்தையை அடையும் திறன்.

## 16. கன்னியாகுமரியில் நகர்புறக் கண்காட்சித் திடல் அமைத்தல்

கைவினை மற்றும் கைத்தறி கலைஞர்களுக்கு பெருநகரங்கள் / சுற்றுலா தளங்கள் போன்ற இடங்களில் நிரந்தர சந்தை வாய்ப்பிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை

ஏற்படுத்துவது இந்த நகர்புறக் கண்காட்சித் திடலின் முக்கிய நோக்கமாகும். இத்திடல் மூலம் கைவினைஞர்கள் தங்களது பொருட்களை ஆண்டு முழுவதும் பெருமளவிலான வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்ய இயலும். பல்வேறு மாநிலங்களின் தொன்மையான இந்திய கைவினைப் பொருட்களை சுழற்சி முறையில் விற்பனை செய்வதற்கு போதுமான அளவில் விற்பனை அரங்குகள் அமைக்கப்பட்டிருப்பது இதன் முக்கிய சிறப்பாகும். இத்திடலின் உணவு மற்றும் விற்பனைக் கூடம், இந்திய கலாச்சாரம் மற்றும் கலைநயத்துடன் பொழுதுபோக்கு அம்சங்கள் கொண்டதாகவும், உள்நாட்டு மற்றும் அயல்நாட்டு சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் ஏற்கனவே உள்நாட்டு / அயல்நாட்டு சுற்றுலா பயணிகள் / நுகர்வோர் மத்தியில் மிகப்பிரபலமாகியுள்ள "தில்லி ஹாட்டின்" அடிப்படையில் செயல்படக்கூடியதாகும்.

இந்நிறுவனம் கன்னியாகுமரியில் ரூ.2.40 கோடி செலவு மதிப்பீட்டில் ஒரு நகர்புறக் கண்காட்சித் திடல் அமைக்கும் பணியை மேற்கொண்டது. இதில் மத்திய அரசு பங்கு ரூ.140.00 இலட்சம், மாநில அரசு பங்கு ரூ.60.00 இலட்சம் மற்றும் இதர அரசு நிறுவனங்களின் பங்கு ரூ.40.00 இலட்சம் ஆகும். இத்திட்டத்தின் கட்டுமானப் பணிகள் பொதுப்பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்த கண்காட்சித்திடல் **36** கடைகள், உணவுக் கூடம், ஓய்வறை, காட்சி அரங்கம், குழந்தைகள் பூங்கா மற்றும் வாகன நிறுத்தும் இடம் ஆகிய வசதிகளைக் கொண்டிருக்கிறது.



**கன்னியாகுமரி நகர்புறக் கண்காட்சித் திடலின் முழுத்தோற்றம்**



**கன்னியாகுமரி நகர்புறக் கண்காட்சித் திடலின் உணவுக் கூடம்**



**கடைகளுக்கான கட்டடத்தின் உட்புறத் தோற்றம்**

## 17. ஒருங்கிணைந்த கைவினைப்பொருட்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சி

இந்திய அரசு ஒருங்கிணைந்த கைவினைப்பொருட்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.20.38 கோடியை குழும அடிப்படையில் செயல்படுத்துவதற்காக அனுமதித்துள்ளது. சிறந்த பணிக்கான சூழ்நிலை, திறன் மேம்பாடு, சந்தை வசதி, புதிய வடிவமைப்புகளை அறிமுகப்படுத்துதல் போன்ற வசதிகளை கைவினைஞர்களுக்கு வழங்குவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டம் கீழ்க்கண்டவற்றை உள்ளடக்கியதாகும்:

| வ.எண் | திட்டத்தின் பெயர் | எண்ணிக்கை | பெறப்பட்டத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | பொது வசதி மையம் | 13 | 780.00 |
| 2 | வடிவமைப்பு கருத்தரங்கு | 63 | 189.00 |
| 3 | ஒருங்கிணைந்த பயிற்சி | 21 | 177.45 |
| 4 | உபகரணப் பொருட்கள் | 10000 கைவினைஞர்கள் | 500.00 |
| 5 | கண்காட்சிகள் | 34 | 362.00 |
| 6 | உற்பத்தியாளர்/நுகர்வோர் கூட்டம் | 2 | 30.00 |
| | மொத்தம் | | 2038.45 |

## 18. தொலைநோக்குத் திட்டங்கள்

கடந்த 2 ஆண்டுகளில் மேற்கொண்ட பல்வேறு புதுமையான யுக்திகள் மற்றும் முயற்சிகளின் அடிப்படையில் இந்நிறுவனம் 2016–2017–ஆம் ஆண்டில் தனது விற்பனையை குறிப்பிடத்தக்க அளவு அதிகரிக்க இயலும் என்று நம்புகிறது. இதன் மூலம் கைவினைஞர்கள் மிகப்பெரிய அளவில் பயன் பெறுவார்கள் என்றும் இந்நிறுவனம் உறுதியாக நம்புகிறது.

# தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

“கதர் உற்பத்தியின் நோக்கம், ஆலை உற்பத்தியாளர்களுடன் போட்டி போட்டுக் கொண்டு சில கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து நவநாகரீகமான கதராடைகளை தயாரித்து நகர்புற மக்களுக்கு விநியோகிப்பது போன்றதல்ல. ஆனால் அது விவசாயத்திற்கு ஒரு துணைத் தொழிலாக இருக்க வேண்டும். இந்த நோக்கம் இன்னும் நிறைவேறாமலே உள்ளது. இந்த நோக்கம் நிறைவேற வேண்டுமானால் இது சுயசார்பானதாகச் செயல்பட வேண்டும். மேலும் அதன் பயன் கிராமங்களுக்குப் பரவ வேண்டும். கிராம மக்கள் எவ்வாறு தங்களது தேவைக்கு ரொட்டி அல்லது அரிசியினை சமைத்துக் கொள்கிறார்களோ அதே போல தங்களது உபயோகத்திற்கு கதராடைகளை உற்பத்திச் செய்ய வேண்டும். தேவைக்கு அதிகமாக இருக்குமேயானால் அதனை விற்பனை செய்யலாம்.”

– மகாத்மா காந்தியடிகள்

கிராம வளர்ச்சிப் பணியில் ஈடுபட்டுள்ள மற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் கிராமப் பகுதிகளில் கதர் மற்றும் கிராமத் தொழில்களை அமைத்தல், ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றை முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் 1960–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் நிறுவப்பட்டது.

கைவினைஞர்கள் மற்றும் கிராமப்புற ஏழை மக்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்திடும் வகையில் தேவைக்கேற்ற இலாபகரமான சுயதொழில் வாய்ப்புகளை உருவாக்குவதே இதன் முக்கியப் பணியாகும்.

**வாரியத்தின் நோக்கங்கள்**

- கதர் மற்றும் கிராமத் தொழில்களின் வளர்ச்சியினை ஊக்குவித்தல்.
- ஊரகப் பகுதியில் உள்ள ஏழை மக்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் சமூக நோக்கத்தினை நிறைவேற்றுதல்.
- சுற்றுச்சூழலுக்கு இணக்கமான, எளிதில் விற்கக் கூடிய கிராமத் தொழில் பொருட்களை உற்பத்தி செய்யும் பொருளாதார நோக்கங்களை செயல்படுத்துதல்.

- ஏழை மக்களிடையே தற்சார்பு நம்பிக்கையினை உருவாக்கி ஒரு வலுவான கிராம சமூக உணர்வினை வளர்க்கும் பரந்த நோக்கத்தினை அடைதல்.
- கிராம கைவினைஞர்கள் ஒருங்கிணைந்து செயல்படுவதன் மூலம் அவர்களின் உற்பத்தி திறன் மற்றும் இலாபத்தினை உயர்த்துதல்.

**நிர்வாகம்**

மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்களை தலைவராகவும் மற்றும் அரசினால் நியமனம் செய்யப்பட்ட அலுவலர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு சட்ட ரீதியான அமைப்பாக தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியம் இயங்கி வருகிறது. திட்டங்களை நிறைவேற்றுவதற்கான முக்கிய கொள்கை முடிவுகள் வாரியக் குழுவினால் எடுக்கப்படுகின்றன. அன்றாட நிர்வாக நடவடிக்கைகள் தலைமைச் செயல் அலுவலரால் கவனிக்கப்பட்டு வருகின்றன.

வாரியத்தின் செயல்பாடுகள் கதர் மற்றும் கிராமத் தொழில்கள் என்ற இரண்டு பிரதானப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

## 1. கதர்

கதர் தேசிய உணர்வின் குறியீடாகவும் நமது விடுதலை போராட்ட நினைவுகளை பிரதிபலிக்கும் பொருளாகவும், சுய சார்பு உணர்வு மற்றும் கிராமப் பொருளாதார வளர்ச்சியினை சுட்டிக் காட்டும் அடையாளமாகவும் விளங்குகிறது. கதர்த் துணி இயற்கையானது, நீடித்து உழைக்கக் கூடியது, சுற்றுச்சூழலுக்கு இணக்கமானது. இந்திய நாட்டின் தட்ப வெப்ப நிலைக்கு ஏற்றது என்பதால் அணிபவருக்கு ஒரு இதமான உணர்வை தோற்றுவிக்கக் கூடியது.

### 1.1 கதர் பருத்தி மற்றும் பாலிவஸ்திரா துணி இரகங்கள்

கிராமப்புற ஏழை எளிய மக்களுக்கு குறிப்பாக பெண்களுக்கு கதர், பட்டு, மற்றும் பாலியஸ்டர் இரகங்கள் உற்பத்தியில் மனித சக்தியினை பயன்படுத்தும் நூற்பு, நெசவு, சலவை மற்றும் சாயப்பணிகளின் மூலம் வேலை வாய்ப்பு கிடைக்க வழிவகை ஏற்படுத்துவதே தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் முக்கியப் பணிகளுள் ஒன்றாகும். வாரியத்தின் கட்டுபாட்டின் கீழ் செயல்படும் 107 கிராமிய நூற்பு நிலையங்களில் நூற்புப் பணிகள் பெரும்பாலும் கிராமப்புற பெண்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த கிராமிய நூற்பு நிலையங்களிலிருந்து பெறப்படும் சிட்டங்கள் கோரா

துணி உற்பத்தி செய்வதற்காக 40 கதர் உற்பத்தி உபகிளைகள் மற்றும் 9 நேபாளி தறி அலகுகளின் மூலம் நெசவாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்றன. இந்த கிராமிய நூற்பு நிலையங்கள் மற்றும் கதர் உற்பத்தி உபகிளைகள் மூலம் சுமார் 20,000 ஏழை எளிய மக்களுக்கு குறிப்பாக கிராமப்புற பெண்களுக்கு நூற்றல், நெய்தல் போன்ற வேலை வாய்ப்புகள் கிடைக்கின்றன. கதர் மற்றும் கிராமத் தொழில் ஆணைக்குழுவினால் சான்றளிக்கப்பட்ட 68 சர்வோதய சங்கங்களும் தமிழகத்தில் கதர் உற்பத்தி மற்றும் விற்பனை செய்வதன் மூலம் கிராமப்புற ஏழை மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கின்றன.

. 2015–2016–ஆம் ஆண்டில் வாரியம் மூலம் ரூ.926 இலட்சம் மதிப்புள்ள கதர் பருத்தி மற்றும் பாலிவஸ்திரா இரகங்களை உற்பத்தி செய்து ரூ.1,795 இலட்சம் மதிப்பிற்கு விற்பனை செய்துள்ளது.



**கிராமிய நூற்பு நிலையம்–(12 கதிர்கள்), திருவரங்குளம்**



**கிராமிய நூற்பு நிலையம்–(8 கதிர்கள்), திருவரங்குளம்**

## 1.2 கதர் பட்டு

நமது மாநிலத்தில் பட்டுத்தொழில் பழம் பெருமை வாய்ந்த ஒன்றாகும். இந்த பழம் பெருமை வாய்ந்த பட்டுப் புடவைகள் 18 கதர் பட்டு உற்பத்தி உப கிளைகள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. நுகர்வோரின் விருப்பத்திற்கேற்ற வகையில் அச்சிட்ட மற்றும் எம்பிராய்டரி வேலைப்பாடுகளுடன் கூடிய பட்டு சேலைகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன. பாரம்பரியம், தரம் மற்றும் சுத்தமான சரிகை ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து பட்டுப் புடவைகள் வாரியத்தினால் உற்பத்தி செய்யப்படுவதால் இவை மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன. வாரியத்தில் உற்பத்தி செய்யப்படும் பட்டுப் புடவைகளுக்கு மத்திய பட்டு வாரியத்தால் தரம் வாய்ந்த பட்டு என்பதற்கு சான்றாக ‘‘சில்க் மார்க் லேபிள்’’ வழங்கப்பட்டுள்ளது. இந்த 18 கதர் பட்டு உற்பத்தி உபகிளைகளின் மூலம் சுமார் 1500 பட்டு நெசவாளர் குடும்பங்களுக்கு ஆண்டு முழுவதும் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது.

2015–2016–ஆம் ஆண்டில் ரூ.539 இலட்சம் மதிப்பிற்கு கதர் பட்டு இரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ.739 இலட்சம் மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.



**கோயம்புத்தூர் பட்டு நெசவு தறிக் கூடம்**

## 2. வணிக அபிவிருத்தி நிதியுதவித் திட்டம்

2010–2011–ஆம் ஆண்டு கதராணையம் "வணிக அபிவிருத்தி நிதியுதவித் திட்டத்தினை" (MDA) அறிமுகப்படுத்தியதைத் தொடர்ந்து, மாநில அரசும் 2012–2013–ஆம் ஆண்டு முதல் கதர் நிறுவனங்களுக்கு ஆண்டு முழுவதும் கதர் உற்பத்தி மீது 20 விழுக்காடு நிதியுதவியாக வழங்கி வருகிறது. இந்த 20 விழுக்காட்டில், 5 விழுக்காடுத் தொகை, கதர் தொழிலில் ஈடுபட்டுள்ள

நூற்பாளர்/ நெசவாளர் மற்றும் பட்டுத் தொழிலை பொறுத்தவரை நெசவாளர்/ இழைப்பவர்/ சாயமிடுபவர்/ ஆகியோருக்கு ஊக்க / மிகை ஊதியத் தொகையாக நேரடியாக வழங்கிடவும், மீதமுள்ள 15 விழுக்காடுத் தொகை, விற்பனையினை அதிகரிக்க ஏதுவாக நுகர்வோர்களுக்கு விற்பனைக் கழிவாக வழங்கிடவும் பயன்படுத்தப்படுகின்றது. இந்த 15 விழுக்காட்டுத் தொகையுடன் கதராணையம் வழங்கும் 15 விழுக்காட்டுத் தொகையையும் சேர்த்து கதர் பருத்தி, பாலிவஸ்திரா மற்றும் பட்டு இரகங்களுக்கு மொத்தம் 30 விழுக்காடு விற்பனைக் கழிவாக நுகர்வோர்களுக்கு நமது மாநிலத்தில் ஆண்டு முழுவதும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மாநில அரசு 2014–2015–ஆம் ஆண்டிலிருந்து சர்வோதய சங்கங்களுக்கு வழங்கப்படும் நிதிவரம்பை ரூ.10 கோடியிலிருந்து ரூ.15 கோடியாக உயர்த்தியுள்ளது.

## 3. கதர் நூற்போர் மற்றும் நெசவாளர்கள்

### 3.1 நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்கான நலநிதி

நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்கான நலநிதி கதர் ஆணைக்குழுவின் வழிகாட்டுதலின்படி வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நெசவாளர்களின் அடிப்படை கூலியில் 12 விழுக்காடும் அதற்கு ஈடாக வாரியத்தின்

நிதியிலிருந்து 12 விழுக்காடும் வாரியநல நிதியாக வழங்கப்படுகிறது. இவ்வகையில் தோற்றுவிக்கப்பட்ட நலநிதியிலிருந்து நூற்போர் மற்றும் நெசவாளர் குடும்பத்தினர் திருமணம், கல்வி, மருத்துவச் செலவு மற்றும் பண்டிகைக் காலங்கள் போன்றவற்றிற்கு நூற்போர் மற்றும் நெய்வோரின் வேண்டுகோளின்படி அவர்களது கணக்கில் உள்ள தொகைக்கு ஏற்ப நிதி உதவியும் ஓய்வு பெறும்பொழுது அவர்களது கணக்கில் உள்ள முழுத்தொகையும் வழங்கப்படுகிறது. மேலும் நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்கு வழங்கும் அடிப்படை கூலியில் 10 விழுக்காடு ஊக்கத் தொகையாக வாரியம் வழங்கி வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2015–2016–ஆம் ஆண்டில் 1845 கைவினைஞர்களுக்கு ரூ.62.38 இலட்சம் நலநிதியாக வழங்கப்பட்டுள்ளது.

## 3.2 கதர் நூற்போர் மற்றும் நெசவாளர் நல வாரியம்

நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்காக அரசினால் நல வாரியம் அமைக்கப்பட்டு கதர் வாரியம் மற்றும் சர்வோதய சங்கங்களில் பணிபுரியும் நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்களுக்கு நல உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த நல வாரியத்தில் உறுப்பினராகப் பதிவு பெற்றுள்ள

நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்களுக்கு நல உதவித் தொகை வழங்கிட ஏதுவாக ஒரு கோடி ரூபாய் அரசால் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நல உதவித் தொகைகள் பின்வருமாறு:

| வ.எண். | உதவிகளின் தன்மை | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | விபத்து ஈட்டுறுதி திட்டத்தின் கீழ் | |
| அ | விபத்தினால் மரணம் ஏற்பட்டால் உதவித் தொகை | 1,00,000/– |
| ஆ | விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைகேற்ப | 10,000/– முதல் 1,00,000/– வரை |
| 2 | இயற்கை மரணத்திற்கான உதவித் தொகை | 15,000/– |
| 3 | ஈமச்சடங்கு செலவிற்கான உதவித் தொகை | 2,000/– |
| 4 | கல்வி உதவித் தொகை | |
| அ | 10–ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,000/– |
| ஆ | 10–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | 1,000/– |
| இ | 11–ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,000/– |
| ஈ | 12–ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,500/– |
| உ | 12–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | 1,500/– |
| ஊ | முறையான பட்டப் படிப்புக்கு | 1,500/– |
| | மாணவர் விடுதி வசதியுடன் முறையான பட்டப்படிப்புக்கு | 1,750/– |

| | | |
|---|---|---|
| எ | முறையான பட்ட மேற்படிப்புக்கு | 2,000/– |
| | மாணவர் விடுதி வசதியுடன் முறையான பட்ட மேற்படிப்புக்கு | 3,000/– |
| ஏ | தொழில் கல்வி பட்டப்படிப்புக்கு | 2,000/– |
| | மாணவர் விடுதி வசதியுடன் தொழிற் கல்வி பட்டப்படிப்புக்கு | 4,000/– |
| ஐ | தொழிற் கல்வி பட்ட மேற்படிப்புக்கு | 4,000/– |
| | மாணவர் விடுதி வசதியுடன் தொழிற் கல்வி பட்டமேற் படிப்புக்கு | 6,000/– |
| ஒ | ஐ.டி.ஐ. அல்லது தொழிற் பயிற்சி படிப்புக்கு | 1,000/– |
| | மாணவர் விடுதி வசதியுடன் ஐ.டி.ஐ. அல்லது தொழிற் பயிற்சி படிப்புக்கு | 1,200/– |
| 5 | திருமண உதவித் தொகை | 2,000/– |
| 6 | மகப்பேறு உதவித் தொகை | |
| அ | மகப்பேறு மாதம் ஒன்றுக்கு ரூ.1000/– வீதம் (மகப்பேறுக்கு முன்பு 3 மாதங்கள் பின்பு 3 மாதங்கள்) | 6,000/– |
| ஆ | கருக்கலைப்பு/கருச்சிதைவு | 3,000/. |
| 7 | மூக்குக்கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல் | 500/– வரை |
| 8 | முதியோர் ஓய்வூதியம் (மாதந்தோறும்) | 1000/– |

இந்த நூற்போர் மற்றும் நெசவாளர் நல வாரியத்தில் 9042 நபர்கள் உறுப்பினராக பதிவு செய்துள்ளனர். இவ்வாரியத்தின் மூலம் 1134 பயனாளிகளுக்கு ரூ.54.52 இலட்சம் மதிப்பில் நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

### 3.3 உற்பத்தியினை மேம்படுத்திட உதவி

கதர் உற்பத்தியினை அதிகரித்திடவும், உற்பத்தித் திறனை மேம்படுத்தி நெசவாளர்களின் வருமானத்தினை உயர்த்திடவும் கடந்த இரண்டு ஆண்டுகளில் கதர் மற்றும் பட்டு நெசவாளர்களுக்கு அச்சு, விழுது, நாடா, ஜக்கார்ட் பெட்டி, தார் சுற்றும் மின்இயந்திரம் போன்ற தறி உபகரணங்களை பழுது நீக்கி புதுப்பித்து வழங்கிட வாரியம் நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த நடவடிக்கை இரண்டு கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டது. முதற்கட்டமாக 2014–2015–ஆம் ஆண்டில் 292 கதர், பாலிவஸ்திரா மற்றும் பட்டு நெசவாளர்களுக்கு ரூ.26 இலட்சம் மதிப்பிலும் இரண்டாவது கட்டமாக 2015–2016–ஆம் ஆண்டில் 201 பட்டு நெசவாளவர்களுக்கு ரூ.10 இலட்சம் மதிப்பிலும் உபகரணங்கள் புதுப்பித்து வழங்கப்பட்டன. மேற்கண்ட முக்கிய உபகரணங்கள் புதுப்பிக்கப்பட்டதன் காரணமாக நெசவாளர்களின் நெசவு நேரம் குறைந்து உற்பத்தியின் அளவு அதிகரித்ததின் மூலம் நெசவாளர்களின் கூலியும் அதிகரித்துள்ளது.




புதுப்பிக்கப்பட்ட உபகரணங்களுடன் பட்டு நெசவு

## 4. கிராமத் தொழில்கள்

கிராமப்புற கைவினைஞர்களின் உள்ளார்ந்த மற்றும் பாரம்பரிய திறமைகளை பயன்படுத்தி உள்ளூரில் கிடைக்கும் மூலப் பொருட்களைக் கொண்டு மனித ஆற்றல் பயன்பாட்டின் அடிப்படையில் வேலைவாய்ப்பு அளிப்பதே கிராமத் தொழில்களின் முக்கிய நோக்கமாகும். தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் அனைத்து கிராமத்தொழில்களும் கிராமப்புற ஏழை மக்களின் மனித ஆற்றலை பயனுள்ள பணிகளுக்கு பயன்படுத்தும் வகையில் மனித உழைப்பினை அடிப்படையாகக் கொண்டவையாகும். இந்த கிராமத்தொழில் திட்டங்கள் ஊரகப்

பகுதிகளில் வறுமையினை ஒழித்திட உதவுவதோடு மட்டுமல்லாமல் கைவினைஞர்களின் சுயசார்பு நம்பிக்கையினை உயர்த்தவும், அவர்கள் தத்தமது பாரம்பரிய தொழில்களை தொடர்ந்து மேற்கொள்ளும் மனத்திட்பத்தினை வளர்க்கவும் உதவுகின்றன.

கிராமத்தொழிலில் 48 உற்பத்தி அலகுகளை கதர் கிராமத்தொழில் வாரியம் இயக்கி வருகிறது.




**தமிழகத்தில் உள்ள தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் பல்வேறு உற்பத்தி அலகுகளின் அமைவிடங்கள்**

## 4.1 சோப்புத் தொழில்

வாரியத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் 17 சோப்பு அலகுகளில், 7 குளியல் சோப்பு உற்பத்தி அலகுகளும் 6 டிடர்ஜெண்ட் உற்பத்தி அலகுகளும் 4 சலவை சோப்பு உற்பத்தி அலகுகளும் அடங்கும்.

குறைந்த மற்றும் நடுத்தர வருவாய் பிரிவினரைக் கவரும் வண்ணம் உகந்த விலையில் புதிய குளியல் சோப்பு வகைகளை வாரியம் அவ்வப்போது அறிமுகம் செய்து வருகின்றது.

2015–2016–ஆம் ஆண்டில் வாரியம் சோப்புத்தொழிலில் 47 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்கியுள்ளது. 2015–2016–ஆம் ஆண்டில் சோப்பு உற்பத்தி ரூ.865.80 இலட்சம் அளவிலும் விற்பனை ரூ.814.44 இலட்சம் அளவிலும் எய்தப்பட்டுள்ளது.



**பூண்டி சலவை சோப்பு அலகு**



**மொடக்குறிச்சி குளியல் சோப்பு அலகு**

### 4.2 தோல் தொழில்

தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் செயல்படும் பல்வேறு தொழில்களில், தோல் தொழில் முதன்மை இடத்தை பெற்றுள்ளது. இவ்வாரியத்தின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும் 13 காலணி உற்பத்திக் கூடங்களில், காவல் துறை, மாநில போக்குவரத்துக் கழகங்கள், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணித் துறை, சென்னை துறைமுகப் பொறுப்புக் கழகம், சிறைத்துறை, சமூக நலத்துறை மற்றும் இதர நிறுவனங்களுக்கு தேவையான பூட்ஸ், ஷூ, காலணி, பெல்ட், துப்பாக்கி உறை, பேருந்து நடத்துனர் பணப்பை, கிரவுண்டு சீட், மெத்தை, தலையணை மற்றும் கோப்புப் பெட்டி போன்ற பல பொருட்கள் தயார் செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. மேலும், காலணிகள் மற்றும் மிதியடிகள் கதர் அங்காடிகள் மூலமாக பொது மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இந்த 13 காலணி உற்பத்தி அலகுகளின் மூலம் சுமார் ஐநூறு கைவினைஞர்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலை வாய்ப்பு பெற்று வருகின்றனர்.

2015–2016–ஆம் ஆண்டில் ரூ.379.62 இலட்சம் மதிப்பிற்கு தோல் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ.376.60 இலட்சம் மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**4.3 தச்சு மற்றும் கருமாரத் தொழில்**

கிராமப்புற கைவினைஞர்களுக்கு சிறந்த வேலைவாய்ப்பு அளிப்பதில் தச்சு மற்றும் கருமாரத் தொழில் மற்றொரு முக்கிய கிராமத் தொழிலாகக் கருதப்படுகிறது. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வீரராகவபுரம், அரக்கோணம், பள்ளிகொண்டா, நாகமலை–புதுக்கோட்டை, திருப்பூர், நாஞ்சிக்கோட்டை மற்றும் திருநெல்வேலி–பேட்டை ஆகிய 7 இடங்களில் தச்சு மற்றும் கருமாரத் தொழில் அலகுகள் இயங்கி வருகின்றன.

அரசு அலுவலகங்கள், பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் அரசு சார்பு நிறுவனங்களுக்குத் தேவைப்படும் மேஜை, நாற்காலி, அலமாரி மற்றும் இருக்கையுடன் இணைந்த மேஜை போன்றவைகள் இந்த 7 அலகுகளிலிருந்து உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

**2015–2016–**ஆம் ஆண்டில் தச்சு மற்றும் கருமார அலகுகளில் ரூ.**344.16** இலட்சம் அளவிற்கு உற்பத்தி செய்யப்பட்டு ரூ.**382.42** இலட்சம் மதிப்புள்ள பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

## 4.4 தேனீ வளர்ப்புத் தொழில்

தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியம் செயல்படுத்தி வரும் தொழில்களில், தேனீ வளர்ப்புத் தொழில் ஒரு வளர்ந்து வரும் தொழிலாகும். இத்தொழில் தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் பெருமளவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்மாவட்டத்தில் மார்த்தாண்டம் மற்றும் அதன் சுற்று வட்டாரப்பகுதிகளில் சுமார் 2000 தேனீ வளர்ப்புத் தொழில் முனைவோரும், 10,000 தொழிலாளர்களும் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

2015–2016–ஆம் ஆண்டில் ரூ.114.81 இலட்சம் மதிப்பிற்கு பச்சை தேன், தேனீ வளர்ப்போரிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டு ரூ.133.80 இலட்சம் மதிப்புள்ள பதப்படுத்தப்பட்ட தேன் நுகர்வோருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

புதுதில்லி தேசிய தேனீ வாரியத்தில், தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியம் நிரந்தர உறுப்பினராக பிரிவு – எப் (மாநில நிறுவனம்) பதிவு செய்யப்பட்டுள்ளது.

## 4.5 கைமுறை காகிதத் தொழில்

வாரியத்தின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் பிடாகம், செண்பகப்புதூர், கோவனூர் மற்றும் உதகை ஆகிய நான்கு

கைமுறை காகித அலகுகளின் மூலம் கச்சா அட்டை, கோப்பு அட்டை, மெல்லிய தாள், பாண்டு தாள், கோப்பு மேலுறைகள், அட்டைப் பெட்டிகள் ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன.

கைமுறை காகிதத் தொழிலின் மூலம் 149 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது. கைமுறை காகித அலகுகளின் மூலம், 2015–2016–ஆம் ஆண்டில் உற்பத்தி மற்றும் விற்பனை முறையே ரூ.54.15 இலட்சம் மற்றும் ரூ.52.97 இலட்சமாகவும் எய்தப்பட்டுள்ளது.



**பிடாகம் கைமுறை காகித அலகில் அட்டை தயாரித்தல்**

### 4.6 மண்பாண்டத் தொழில்

கைமுறையில் மண்பாண்டங்கள் உற்பத்தி செய்வது கிராமப்புறங்களில் வாழும் மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு பாரம்பரிய கலையாகவும், அடிப்படை வாழ்வாதாரமாகவும் விளங்குகிறது. வாரியத்தின் கீழ் பதிவு பெற்ற 34 மண்பாண்டத் தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களில் 3,816 உறுப்பினர்கள் உள்ளனர்.

## 5. கதர் மற்றும் கிராமத் தொழில் உற்பத்தி அலகுகளை நவீனப்படுத்துதல்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், தனது உற்பத்தி அலகுகளை அரசின் நிதியுதவியுடன் படிப்படியாக நவீனப்படுத்தி வருகிறது. அரசின் நிதியுதவியுடன், கீழ்க்காணும் அலகுகளை நவீனப்படுத்திடும் நடவடிக்கையினை ஏற்கெனவே கதர் கிராமத்தொழில் வாரியம் மேற்கொண்டுள்ளது.

### 5.1 கிராமிய நூற்பு நிலையம்

ஊரகப் பகுதிகளில் உள்ள 30 கிராமிய நூற்பு நிலையங்களுக்கு கழிப்பறை போன்ற அடிப்படை வசதிகள் ரூ.9 இலட்சம் செலவில் அமைத்து தரப்பட்டுள்ளன.

## 5.2 சோப்பு அலகுகள்

செவ்வாப்பேட்டை, பெருமாள்மலை மற்றும் பண்ருட்டி ஆகிய இடங்களில் உள்ள வாரிய சோப்பு அலகுகளின் உற்பத்தியினை அதிகரித்திட ரூ.11 இலட்சம் செலவில் புதிய இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன.

சமயபுரத்தில் உள்ள சோப்பு அலகு, தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியத்தின் கீழ் இயங்கி வரும் மிகப்பெரிய சோப்பு அலகு ஆகும். அரசு, இவ்வலகினை நவீனப்படுத்திட ரூ.250 இலட்சம் நிதியுதவி அளித்துள்ளது. கதர்கிராமத்தொழில் வாரியம், இங்கு 6000 சதுர அடியில் புதிய கட்டடம் கட்டி நாள் ஒன்றுக்கு 60,000 சோப்புகள் உற்பத்தி செய்யும் தானியங்கி குளியல் சோப்பு இயந்திரத்தினையும் கொள்முதல் செய்துள்ளது. இத்தானியங்கி இயந்திரம் விரைவில் செயல்பாட்டுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.



சமயபுரம் தானியங்கி குளியல் சோப்பு தயாரிப்பு
அலகில் புதியதாக கட்டப்பட்ட கட்டடம்



சமயபுரத்தில் நிறுவப்பட்டு வரும் தானியங்கி குளியல் சோப்பு
தயாரிக்கும் இயந்திரம்

## 5.3 சமயபுரம் எண்ணெய் பிழியும் அலகு

சமயபுரம் சோப்பு அலகு வளாகத்தில் செயல்பட்டுவரும் எண்ணெய் பிழியும் அலகின் இயந்திரங்கள் ரூ.3.76 இலட்சம் செலவில் புனரமைக்கப்பட்டுள்ளன. இவ்வலகில் உற்பத்தி செய்யப்படும் வேம்பு எண்ணெய் வாரியத்தின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் சோப்பு அலகுகளில் சோப்பு தயாரிக்க பயன்படுத்தப்பட்டு வருகிறது.



**சமயபுரம் அலகில் உள்ள எண்ணெய் பிழியும் இயந்திரம்**

## 5.4 வேடபட்டி, ஜவ்வாது அலகு

வாரியத்தின் கட்டுப்பாட்டின் கீழ் திண்டுக்கல் மாவட்டம் வேடபட்டியில் இயங்கி வரும் ஜவ்வாது அலகினை

நவீனப்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வலகில் உடனடி சாம்பிராணி தயாரித்திட புதிய இயந்திரம் நிறுவப்பட்டுள்ளது. இந்த வேடபட்டி அலகில் நவீன இயந்திரம் நிறுவி கட்டடம் கட்டிட அரசு இந்நிதியாண்டில் ரூ.40.00 இலட்சம் நிதியுதவி வழங்கியுள்ளது.



**வேடபட்டி ஜவ்வாது அலகில் பெண்களுக்கு வேலைவாய்ப்பு**

## 5.5 காலணி அலகு, அம்பத்தூர்

உற்பத்தியினை அதிகரித்திடவும் அதிக தரம் மற்றும் அதிக அளவில் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பினை அளித்திடவும், அம்பத்தூர் காலணி அலகு நவீனப்படுத்தப் பட்டுள்ளது. அரசு வழங்கிய ரூ.150 இலட்சம் நிதியுதவியில் புதிய இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன.




நவீனப்படுத்தப்பட்ட அம்பத்தூர் காலணி அலகு

## 5.6 தச்சு மற்றும் கருமார அலகு, பள்ளிகொண்டா

ஊரக கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை அதிகரித்திடவும் உற்பத்தி மற்றும் தரத்தினை அதிகரித்திடவும் வேலூர் மாவட்டம், பள்ளிகொண்டா, தச்சு மற்றும் கருமார கொல்லு அலகினை நவீனப்படுத்திட அரசு ரூ.65.00 இலட்சம் நிதியுதவி அனுமதித்துள்ளது. அதன்படி பள்ளிகொண்டா அலகில் ரூ.40.00 இலட்சம் மதிப்பில் நவீன இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன. ரூ.25.00 இலட்சம் மதிப்பில் கட்டடப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



பள்ளிகொண்டா தச்சு மற்றும் கருமார அலகில் நிறுவப்பட்டுள்ள
நவீன தகடு வெட்டும் இயந்திரம்



பள்ளிகொண்டா தச்சு மற்றும் கருமார அலகில்
கட்டப்பட்டு வரும் பணிக்கூடம்

### 5.7 தேன் பதப்படுத்தும் அலகு, அம்சி

தேனீ வளர்ப்போரிடமிருந்து பச்சைத் தேன் கொள்முதல் செய்யும் அளவினை உயர்த்தி தேன் பதப்படுத்தப்படும் திறனை அதிகப்படுத்திடவும் வரையறுக்கப்பட்ட அளவில் கண்ணைக் கவரும் வகையில் தேனை புட்டிகளில் நிரப்பிடவும் கன்னியாகுமரி மாவட்டம் அம்சியில் அதிநவீன தேன் பதப்படுத்தும் மற்றும் தானியங்கி தேன் நிரப்பும் இயந்திரங்களை நிறுவிடவும், புதிய கட்டடம் கட்டவும் அரசு ரூ.60 இலட்சம் நிதியுதவி வழங்கி உள்ளது.

### 5.8 கைமுறை காகித அலகு, கோவனூர்

உட்புறம் துணியுடன் கூடிய காகித உறை தயாரிக்கும் ஒருங்கிணைந்த நவீன இயந்திரம் கோவனூர் கைமுறை காகித அலகில் அரசு வழங்கிய ரூ.3.84 இலட்சம் நிதியுதவியுடன் நிறுவப்பட்டுள்ளது. இதன் மூலம் அரசு அலுவலகங்களுக்கு தேவைப்படுகின்ற உட்புறம் துணியுடன் கூடிய காகித உறைகளை அதிக அளவில் தயாரிக்க இயலும்.



**கோவனூர் கைமுறை காகித அலகில் நிறுவப்பட்டுள்ள துணியுடன் கூடிய காகித உறை தயாரிக்கும் நவீன இயந்திரம்**

## 5.9 பீங்கான் கலைக்கூடம், விருத்தாச்சலம்

மண்பாண்டத் தொழிலுக்கு தேவைப்படும் சூளை சுடுதிறனை துரிதப்படுத்தி, முறைப்படுத்திட விருத்தாசலம் பீங்கான் கலைக்கூடத்தில் அரசு வழங்கிய ரூ.25.00 இலட்சம் நிதியுதவியுடன் புதிய சூளை நிறுவப்பட்டுள்ளது. இங்கு தயாரிக்கப்படும் அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய சுடுமண் பொம்மைகள் மாநிலத்திலுள்ள அனைத்து கதர் அங்காடிகள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.



**விருத்தாச்சலம் பீங்கான் கலைக்கூடம் – நவீன சூளை**

## 6. மண்பாண்டத் தொழிலாளர் குடும்பங்களுக்கு பராமரிப்பு உதவித்தொகை

மண்பாண்டத் தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்ட தொழிலாளர்கள் மழைக்காலங்களில் சந்திக்கும் இடர்பாடுகளை களைந்திடும் வகையில் **2014–2015** மற்றும் **2015–2016**–ஆம் ஆண்டுகளில் ஒரு குடும்பத்திற்கு தலா ரூ.**4,000/–** வீதம் **12236** மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு மழைக்கால பராமரிப்பு உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. இது தவிர கடலூர், சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் **2015** நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட **726** குடும்பங்களுக்கு மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.**57.00** இலட்சம் அரசு வழங்கியுள்ளது.

## 7. ‘காதி கிராப்ட்’ விற்பனை நிலையங்கள்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தால் பல்வேறு விற்பனை நிலையங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதாவது தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் பல்வேறு அலகுகளில் உற்பத்தி செய்யப்படும் கதர் மற்றும் கிராமப் பொருட்களை பெரிய அளவில் சந்தைப்படுத்திட ஏதுவாக சென்னை குறளக கட்டடத்தில் **‘காதி கிராப்ட்’** என்ற ஒரு பெரிய கதர் அங்காடியினை வாரியம் நடத்தி வருகிறது. மாநிலம் முழுவதும் **92** கதர் அங்காடிகள் செயல்பட்டு வருகின்றன. வாரிய அலகுகளில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களைத் தவிர, சுயஉதவிக்குழுக்கள் மற்றும் பாரம்பரிய கைவினைஞர்கள் உற்பத்தி செய்யும் கைவினைப் பொருட்களும் இந்த கதரங்காடிகள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.




**ஈரோடு காதி கிராப்ட் விற்பனை நிலையம்**

தேசிய அளவில் கண்காட்சிகள் மற்றும் கிராமப்புறங்களில் சிறப்பு முகாம்கள் நடத்துவதன் மூலமும் கதர் மற்றும் கிராமத் தொழில் உற்பத்தி பொருட்களின் விற்பனையினை மக்களிடையே பிரபலப்படுத்திட சிறப்புக் கவனம் செலுத்தப்படுகின்றது.

நவீன முயற்சியாக, வாரியத்தின் சென்னை பிரதான கதர் அங்காடியில் செயல்பட்டு வரும் இயற்கை சிகிச்சை மையத்தில் நுகர்வோர் மற்றும் கதர் அங்காடியின் வாடிக்கையாளர்கள் பயன்படுத்தும் வகையில் நீராவிக் குளியல், தண்டுவட குளியல், மண் குளியல் மற்றும் எண்ணை மசாஜ் போன்ற இயற்கை சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2015–ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பெய்த எதிர்பாராத பெருமழை மற்றும் வெள்ளம் காரணமாக திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் கடலூர் மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு சுமார் ரூ.279 இலட்சம் மதிப்பில் 77,000 போர்வைகளும், சுமார் ரூ.67 இலட்சம் மதிப்பில் 73,000 பாய்களும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் வழங்கப்பட்டன.

## 8. பிரதம மந்திரியின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம்

பிரதம மந்திரியின் வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் கிராமப்புற வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களை ஒருங்கிணைத்து **பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்** கதர் கிராமத்தொழில் ஆணைக்குழுவினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் கிராமப்புறத்தில் தொழில் தொடங்க **25** விழுக்காடு முதல் **35** விழுக்காடு வரை விளிம்புத் தொகை மானியம் வழங்கப்பட்டு வருகிறது. **2011–2012**–ஆம் ஆண்டு முதல் **2015–2016**–ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்ட விளிம்புத் தொகை மானிய விவரம் பின்வருமாறு:

| ஆண்டு | குறியீடு (எண்ணிக்கையில்/ரூபாய் இலட்சத்தில்) | | | சாதனை | | |
|---|---|---|---|---|---|---|
| | செயல் இலக்கு | நிதி இலக்கு | வேலை வாய்ப்பு எண்ணி–க்கை | செயல் இலக்கு | நிதி இலக்கு | வேலை வாய்ப்பு எண்ணி–க்கை |
| 2011–2012 | 712 | 997.04 | 7120 | 572 | 823.12 | 4939 |
| 2012–2013 | 0 | 0 | 0 | 151 | 254.51 | 1731 |
| 2013–2014 | 1379 | 1751.93 | 11032 | 602 | 1311.31 | 7212 |
| 2014–2015 | 1218 | 1447.49 | 9744 | 845 | 1726.62 | 9151 |
| 2015–2016 | 765 | 1530.24 | 6120 | 686 | 1605.56 | 6021 |

பிரதம மந்திரியின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத்தினை மும்பை கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு ஒருங்கிணைத்து செயல்படுத்தி வருகின்றது. தமிழ்நாட்டில் கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு, தொழில் வணிகத் துறை மற்றும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் ஆகியவற்றின் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தொழில் முனைவோர்களிடமிருந்து விண்ணப்பங்கள் மாவட்ட உதவி இயக்குநர் அலுவலகங்களில் பெறப்பட்டு, அவை மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்ட மாவட்ட சிறப்புப்பணிக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டு, தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் கடன் வழங்கும் வங்கிகளுக்கு பரிந்துரை செய்யப்படுகின்றன.

## 9. அரசின் நிதியுதவி


வாரியப் பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு, முறையே ஊதியம் மற்றும் ஓய்வூதியத்தினை அரசு நிகர ஈட்டு மானியமாக முழுவதும் வழங்கி வருவதுடன், கதர் உற்பத்திக்கான தள்ளுபடி மானியமும் வழங்கி வருகிறது. **2016–2017**–ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மற்றும் தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்திற்கு அரசு கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது:

| வ.எண் | விவரம் | | தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | கதர் மேம்பாட்டிற்கான மானியங்கள் | | 7178.32 |
| 2 | தள்ளுபடி | கதர் வாரியம் | 200.00 |
| | | சான்றளிக்கப்பட்ட நிறுவனங்கள் | 1500.00 |
| 3 | தணிக்கை கட்டணம் | | 346.20 |
| 4 | புதுமையான திட்டங்கள் | | |
| அ | தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் | | 0.01 |
| ஆ | தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம் | | 0.01 |
| 5 | மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு பராமரிப்பு உதவித்தொகை | | 524.72 |
| 6 | மேற்கு தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்திற்கு மானியங்கள் | | |
| அ | தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் | | 0.01 |
| ஆ | தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம் | | 0.01 |
| 7 | கதர் நூல் நூற்போர் மற்றும் நெசவாளர் நலவாரியம் | | 0.01 |
| | மொத்தம் | | 9749.29 |


## 10. உற்பத்தி மற்றும் விற்பனை

2015–2016–ஆம் ஆண்டில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் உற்பத்தி மற்றும் விற்பனை புள்ளி விவரங்கள் பின்வருமாறு:

| வ.எண் | தொழில்களின் பெயர் | 2015–2016–ஆம் ஆண்டில் எய்தப்பட்டது (ரூ. இலட்சத்தில்) | |
|---|---|---|---|
| | | உற்பத்தி | விற்பனை |
| 1. | கதர் | 1464.49 | 2574.13 |
| 2. | கிராமத் தொழில்கள் | | |
| அ | தோல் | 379.62 | 376.60 |
| ஆ | தச்சு மற்றும் கருமாரத் தொழில் | 344.16 | 382.42 |
| இ | சோப்பு | 865.80 | 814.44 |
| ஈ | கைமுறை காகிதம் | 54.15 | 52.97 |
| உ | தேனீ வளர்ப்பு | 114.81 | 133.80 |
| ஊ | இதர தொழில்கள் | 87.62 | 485.55 |
| | கூடுதல் | 1846.16 | 2245.78 |
| | மொத்த கூடுதல் | 3310.65 | 4819.91 |





**கதர் கிராமப்பொருட்களின் உற்பத்தி 2015–2016**




**கதர் கிராமப்பொருட்களின் விற்பனை 2015–2016**

கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியத்தின் விற்பனை விவரங்கள் பின்வருமாறு:




**கதர் கிராமப்பொருட்களின் விற்பனை**

**தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியத்தில் கடந்த பதினைந்தாண்டுகளில் எய்தப்பட்ட விற்பனையில் 2015–2016–ஆம் ஆண்டு எய்தப்பட்ட விற்பனையே அதிகமானதாகும்.**

# தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம்

## 1. நோக்கங்கள்

தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம் **1994–1995–** ஆம் ஆண்டில் சென்னையை தலைமை இடமாகக் கொண்டு நிறுவப்பட்டது. பனை பொருட்களின் உற்பத்தியை அதிகரித்திட நிறுவன ரீதியான உதவிகளை வழங்குதல், பனைத் தொழிலாளர்களை ஒருங்கிணைத்து கூட்டுறவு அமைப்புகள் மூலம் பனை தொழிலை நிலைபெறச் செய்து மேம்படுத்துதல், பனைத் தொழிலில் ஈடுபட்டுள்ள பனைத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் போன்றவை பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின் முக்கிய நோக்கங்கள் ஆகும்.

## 2. பனை வெல்ல கூட்டுறவு சங்கங்கள் மற்றும் சம்மேளனங்கள்

தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம் பனை பொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனையில் நேரடியாக ஈடுபடுவதில்லை. **731** ஆரம்ப பனை வெல்ல கூட்டுறவு சங்கங்கள், **8** மாவட்ட பனை வெல்ல விற்பனை கூட்டுறவு சம்மேளனங்கள் மற்றும் ஒரு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையம் ஆகியவை தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின் கட்டுப்பாட்டில்

செயல்பட்டுவருகின்றன. இந்த கூட்டுறவு சங்கங்கள் மற்றும் சம்மேளனங்கள் நேரடியாக பனை பொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்டு வருகின்றன.

### 3. பனை பொருட்கள்

'பதநீர்' பனை பொருட்களில் முதன்மையானதாகும். பதநீரை மூலப் பொருளாகக் கொண்டே கருப்பட்டி என வட்டார மொழியில் அழைக்கப்படும் பனை வெல்லம், பனங்கற்கண்டு, பனஞ்சீனி, பனங்கற்கண்டு மிட்டாய், கருப்பட்டி அல்வா, பனைச்சாக்லேட் மற்றும் பனம்பழ கூழ் போன்ற பல்வேறு உணவுப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. பனை மரங்கள் அதிகம் வளரும் பகுதிகளில், பதநீர் பருவ காலத்தில் பனை மரத்திலிருந்து இறக்கப்படும் பதநீர் மிகவும் விரும்பி அருந்தக்கூடிய ஒரு பிரபலமான பானமாகும்.



**பனை ஓலை பொருட்கள்**



**பனங்கற்கண்டு மிட்டாய்**



**பனஞ்சர்க்கரை**



**பனங்கற்கண்டு**



பனை ஓலை விசிறி



பனைவெல்லம்



பனைவெல்லம் காய்ச்சுதல்

பனையிலிருந்து உண்ணாப் பொருட்களான பல்வேறு வகையான பனந்தும்பு தூரிகைகள், விசிறிகள், பாய்கள், பனை ஓலையினாலான பல்வேறு வகை கூடைகள், பனை நார் பொருட்கள், பொம்மைகள் மற்றும் பல்வேறு வகையான இயல்பான மற்றும் வண்ணம் பூசப்பட்ட கைவினைப் பொருட்கள் போன்றவை பனைத் தொழில் கைவினைஞர்களால் தயாரிக்கப்படுகின்றன.

### 4. பனைவாரியம் மற்றும் பனைத்தொழிலாளர்களுக்கு உரிமம்

பனை மரத்திலிருந்து இறக்கப்படும் பதநீர் தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுக்கும் வகையில் பதநீர் இறக்கவும், விற்பனை செய்யவும் உரிமம் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. **01.01.2016** முதல் மூன்றாண்டுகளுக்கு தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்திற்கு இதற்கான உரிமத்தினை அரசு புதுப்பித்து வழங்கியுள்ளது.



**பனை மரத்திலிருந்து பதநீர் இறக்குதல்**

**2015–2016–**ஆம் ஆண்டில் அந்தந்த மாவட்ட பனை வெல்ல கூட்டுறவு சம்மேளனங்கள் / கதர் கிராமத் தொழில்கள் உதவி இயக்குநர்கள் மூலமாக **9710** பனைத்தொழில் கைவினைஞர்களுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

## 5. பனைத் தொழில் கைவினைஞர்களுக்கான உதவிகள்

நவீன கருவிகள் மூலம் பனை மரம் ஏறுவதற்கான பயிற்சி வகுப்புகள் நடத்துதல், பதநீர் இறக்கவும், பனை வெல்லம் காய்ச்சவும் மற்றும் பிற பனை பொருட்கள் உற்பத்தி செய்யத் தேவையான கருவிகளை வழங்குதல் போன்ற உதவிகளை பனைத் தொழில் கைவினைஞர்களுக்கு தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம் செய்து வருகிறது.



**காய்ச்சிய பதநீரிலிருந்து பனைவெல்லம் (கருப்பட்டி)தயாரித்தல்**

## 6. நிர்வாகம்

தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்திற்கென தனியே வரவு செலவு திட்டம் ஏதுமில்லை. தலைமைச் செயல் அலுவலர் உட்பட தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி

வாரியத்தின் பணியாளர்கள் அனைவரும், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் பணியமைப்பைச் சேர்ந்தவர்கள். தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின் கட்டுப்பாட்டிலுள்ள ஆரம்ப பனை வெல்ல கூட்டுறவு சங்கங்கள், மாவட்ட மற்றும் மாநில பனை வெல்ல கூட்டுறவு சம்மேளனங்கள் ஆகியவற்றிற்கு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தலைமைச் செயல் அலுவலரே செயற்பதிவாளர் ஆவார்.

**7. பனை பொருட்களின் விற்பனை**

பதநீர் பனை மரத்திலிருந்து இறக்கப்பட்ட ஒருசில மணி நேரத்திற்குள்ளாக பருகப்படவேண்டிய இனிமையான மற்றும் சத்துகள் அடங்கிய பானமாகும். எனவே, பதநீரின் இயல்பு மாறாதிருக்க, பதநீரை பனை மரத்திலிருந்து இறக்கியது முதல் வாடிக்கையாளர் பருகும் வரை தொடர்ந்து குளிர்சாதன முறையில் பாதுகாக்கப்பட வேண்டும். இதனை செயல்படுத்திட பதநீரை 'பாக்கெட்'டில் நிரப்பும் இயந்திரம், குளிரூட்டும் இயந்திரம், ஐஸ் பெட்டிகள் மற்றும் அலுமினிய கேன்கள் ஆகியவற்றை கொள்முதல் செய்திட அரசு நிதி உதவி செய்துள்ளது.


பனை வாரியத்தின் பல்வேறு பனை பொருட்களை விற்பனை செய்திட தனிப்பட்ட பனை பொருள் அங்காடி ஒன்று

சென்னை குறளகம் வளாகத்தில் இயங்கி வருகிறது. தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம் 2015–2016–ஆம் ஆண்டில் ரூ.2.60 இலட்சம் மதிப்பில் இவ்விற்பனை மையத்தை புதுப்பித்துள்ளது.

**8. பனை பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை**

2015–2016–ஆம் நிதி ஆண்டில், ரூ.1337.03 இலட்சம் மதிப்பிலான பனை பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு, ரூ.1462.09 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன. நடப்பு 2016–2017–ஆம் ஆண்டிற்கு உற்பத்தி இலக்கு ரூ.1500.00 இலட்சமாகவும், விற்பனை இலக்கு ரூ.1700.00 இலட்சமாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## கடந்த ஐந்து ஆண்டுகளில் உற்பத்தி மற்றும் விற்பனை




**மேற்கண்ட வரைபடத்திலிருந்து பனை பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை கடந்த ஐந்து ஆண்டுகளில் ஆண்டுதோறும் சீரான வளர்ச்சியடைந்து வருகிறது என்பதை அறிய முடிகிறது.**

**க.பாஸ்கரன்**
கதர் மற்றும் கிராமத் தொழில்கள்
வாரியத்துறை அமைச்சர்